அனைவருக்கும் மனித உரிமைகள் :
சமாதான முறைவழியில் சிறுபான்மையினரின் உரிமைகள்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறுபான்மையினரின்
உரிமைகள் பற்றிய செயற்றிட்டம்

# சிறுபான்மையோரினதும், பெண்களினதும், பிள்ளைகளினதுமான உரிமைகள்

பேராசிரியை சுவர்ணா ஜயவீர
சரினா குணரத்ன

மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை.

அனுசரணை : ஐரோப்பிய ஒன்றியம்

# பொழிப்பு

## சிறுபான்மையோரும் பெண்களினதும் பிள்ளைகளினதும் உரிமைகளும்

பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும், முறைமைகள் பூராகவும் உள்ளடக்கப்பட்டுத் தொடர்ந்து பின்பற்றப்பட்ட கட்டமைப்புச்சார் மற்றும் சமூகஞ்சார் பங்கங்களின் ஊடாக வரலாற்றுமுறையில் ஓரங்காட்டப்பட்டுள்ளது. சட்டக் கட்டுக்கோப்பிலும் அபிவிருத்திக் கொள்கைகளிலும் நிகழ்ச்சித் திட்டங்களிலும் பெண்களினதும் பிள்ளைகளினதும் சிறுபான்மை உரிமைகளின் இருதிற முகப்புகளை இப்பத்திரம் கண்டுபிடிக்க முயல்கிறது.

இலங்கை அரசியலமைப்பானது, அதன் சட்டக்கட்டுக்கோப்பினுள், பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் அளிக்கப்படும் உரிமைகளின் பாதுகாப்பைக் கொண்டுள்ளது. பால், மதம், மொழி, இனம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட எவ்வகையினதுமான ஓரங்காட்டுகை அனுமதிக்கப்படுவதில்லை என்பதுடன், எல்லாப் பிரசைகளுக்குமான சமத்துவமும் பாதுகாப்பும் ஓர் உரிமையென்ற வகையில் அளிக்கவும் படுகிறது. துரதிஷ்டவசமாக அரசு மீறுபவராக இருக்கும்போது மட்டுமே இவ்வுரிமைகள் அளிக்கப்படுகின்றன. தனியாள் ஒருவர் ஒரு பெண்ணுக்கெதிரான குற்றச்செயலைப் புரிந்தால், குற்றச்செயல் புரிந்தவருக்கெதிரான முறைப்பாடொன்றைத் தாமாகவே கோப்பிடுவதற்கு அவளுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு மாதகாலமே கிடைக்கும். சட்டத்தின் அனுகூலத்தை முழுமையாகப் பெறுவதற்குப் பெண்கள் மேற்கொள்ளவேண்டிய சமூக, பொருளாதாரத் தடைகளைக் கணக்குக்கெடுப்பதற்கான தொலைநோக்கை இந்நிலைமை கொண்டிருப்பதில்லை.

சட்டவலுவுறுத்தல் மற்றும் குற்றவியல் நீதிக்கிளைகள், பெண்களுக்கும் பிள்ளைகளுக்குமெதிராகப் புரியப்படும் பல குற்றச்செயல்களை மேவுகின்ற, நியாயமாக எல்லாவற்றையும் உள்ளடக்குகின்ற

தண்டனைச் சட்டக்கோவையொன்றை அமைத்துள்ளன. எவ்வாறாயினும், அதிகமாக நிலவுகின்ற குடும்ப நிந்தனையென்ற குற்றச்செயலையும் பெண்ணின் மீதும் குடும்பத்தின்மீதும் அது கொண்டுள்ள தீமை விளைவிக்கும் பயனையும் அது ஏற்றங்கீகரிக்கத் தவறுகின்றது. வித்தியாசமான இனரீதியிலான மற்றும் மதஞ்சார் சமுதாயங்களினால் உருவாக்கப்படும் ஏனைய ஆள்சார் சட்டங்களும் பெண்களைக் கொடுமைப்படுத்தலுக்குட்படுத்துகின்ற சமூகஞ்சார் பங்கங்களையும் ஓரங்காட்டுதலையும் எதிர்நோக்குவதற்குத் தவறுகின்றன. (அதாவது திருமணமும் ஆதனச் சட்டங்களும்) 11ஆம் பக்கத்திலுள்ள விதப்புரைகளைப் பார்க்கவும்.

இலங்கை அபிவிருத்திக் கொள்கைகள் கூடுதலாகச் சீராக்கப்படல் வேண்டும். தெளிவான கட்டுக் கோப்பும் தொடர்ச்சியும் இல்லாமையினால், பெண்களினதும் பிள்ளைகளினதும் பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்கு அவசியமாகவுள்ள முழுமைப்படைப்புக் கோட்பாட்டு நோக்கு அடியோடு இல்லை. அபிவிருத்தியின் மனித உரிமைகள் கட்டுக்கோப்பு, சமூக ஒப்புரவு மற்றும் பால் ஒப்புரவு என்பனவற்றை முதலில் வைத்து, சமத்தொகுதிகள், கொள்கைகள், திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றினுள் பெண்களினதும் பிள்ளைகளினதும் உரிமைகள் இட்டுச் செல்லப்பட வேண்டும். கல்வித்துறையின் அபிவிருத்தி, வருகை வீதங்கள், கல்வியறிவு வீதங்கள் மற்றும் பங்குபற்றுகை என்பவற்றில் சில திட்டவட்டமான சீராக்கல்கள் காணப்பட்டுள்ளன. எனினும், பாடவிதானத்தில், கல்விச் சாதனங்களில், மற்றும் பாடசாலைச் சூழலில் பால் அத்துடன் இனரீதியான மாறா நிலைகளில் நீக்குகை இன்னமும் நடைபெறவில்லை. பெண்களைப் பராதீனப்படுத்தி தலைமுறை தலைமுறையாகச் செல்கின்ற எதிர்மாறான மரபுமுறைகளைத் தூண்டுகின்ற "மறைமுகமான காரணி" அதன்கண் உள்ளது. வேடர்களின் பிள்ளைகள் உடல்ரீதியிலும் உளரீதியிலும் சவாலுக்குட்படுத்தப்பட்ட பிள்ளைகள், வேலைசெய்யும் மற்றும்

தெருப்பிள்ளைகள் முதலியவர்கள் போன்ற மிகவும் பிரதிகூலம்வாய்ந்த சமுதாயங்களில் பங்குபற்றுகையிலும் கல்வியை அணுகுவதிலும் ஏற்றத்தாழ்வுகளை இன்னமும் காணமுடியும். 21ஆம் பக்கத்திலுள்ள விதப்புரைகளைப் பார்க்கவும், தொழிற்றுறையில் தொழில்தருநர்கள், உருவாக்கும் பதவிகளை உள்ளார்ந்தனவாக "ஆண்", அல்லது "பெண்" என வகுதிப்படுத்துவதனால், பெண்கள் பாரிய ஓரங்காட்டுதலுக்கு ஆளாகியுள்ளனர். முகாமைத்துவம், ஒப்புரவான வேதனம், பொருளாதாரச் சுதந்திரம் என்ற உயர்பதவிகளை எய்துவதிலிருந்து பெண்களை வரையறுப்பதனை இது விசாலித்துள்ளது. 26ஆம் பக்கத்திலுள்ள விதப்புரைகளை பார்க்கவும்.

# 1. முகவுரை

பெண்களின் உரிமைகளும் பிள்ளைகளின் உரிமைகளும் பராதீனப்படுத்தப்பட முடியாதவை என்பதுடன், மனித உரிமைகளில் ஒன்றிணைக்கப்பட்டும் உள்ளன. இலங்கையில் பெரும்பான்மைச் சிங்களச் சனத்தொகையிலிருந்து தனிவேறான இனரீதியிலான சிறுபான்மையோர் உள்ளனர். இலங்கைத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள், பெருந்தோட்டத் தொழிலாளர் போன்ற அண்மைக் காலத்திய இந்தியர், மலே மக்கள் மற்றும் பறங்கியர். ஊவா மாகாணத்திலுள்ள சிறிய சமுதாயத்தினரான வேடர்கள், சுதேச சனத்தொகுதியின் எஞ்சியுள்ளவர்களாகவுள்ளனர் என்பதுடன், இவர்களுட் பெரும்பாலானோர் சிங்கள, தமிழ் மக்களுடன் பல்லாண்டுக்காலமாக ஒன்றிணைந்து வாழ்ந்து வந்துள்ளனர். சனத்தொகையுள் பெரும்பான்மையோர் பௌத்தர்கள் ஆவர் என்பதுடன், இந்து, இஸ்லாமிய, ரோமன் கத்தோலிக்க மற்றும் வேறு கிறிஸ்தவச் சிறுபான்மையோரும் உள்ளனர். இந்தச் சனத் தொகுதிகளிலுள்ள ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகியோரின் உரிமைகள் மனித உரிமைகள் என்ற எண்ணக் கருவிற்குள் அடங்குகின்றன.

2001ஆம் ஆண்டில் ஆட்டொகைக் கணிப்பு, மாத்திரமே, கிழக்கு மாகாணதில் அம்பாறை உள்ளிட்ட, 18 மாவட்டங்களில நடாத்தப்பட்டது. ஆகவே, வடக்கு மாகாணத்துக்கும், கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலைக்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் ஆட்டொகைக் கணிப்புத் தரவுகள் கிடையாது. 18 மாவட்டங்களிலும் பெண்கள் மொத்தச் சனத்தொகையின் 51 சதவீதமாக உள்ளதுடன் 18 மாவட்டங்களுள் 12 மாவட்டங்களில் அரைவாசிக்கு மேற்பட்ட சனத்தொகையையும் கொண்டுள்ளனராய் பால் விகிதம் 97.9ஆகவும் உள்ளது. குறைவடைந்துவரும் கருக்கட்டு மட்டங்களின் விளைவாகப் பிள்ளைகளின் சனத்தொகை (18வயதுக்குக்

மீழ்) 18 மாவட்டங்களிலும் 1981ஆம் ஆண்டில் முழுத்தீவிலும் 41.6சதவீதத்திலிருந்தது 32.9 சதவீதத்துக்குக் குறைந்துள்ளது. ஆகவே, பெண்களோ பெண்பிள்ளைகளோ சிறுபான்மைச் சமுதாயங்களில் 'சிறுபான்மையோர்' அல்ல; ஆனால் ஆண்களுடனும் ஆண்பிள்ளைகளுடனும் ஒப்பிடுகையில், அவர்கள், சொத்துக்கள், மூலவளங்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் உறவடிப்படையில் அனுகூலம் குறைந்தவர்களாகவும், வித்தியாசமான இனரீதியிலான சமுதாயங்களினது ஆள்சார் சட்டங்களின் விடயத்திலும் சமூகப் புலனுணர்வுகளிலும் வழக்கத்திலும் ஓரங்காட்டப்படுபவர்களாகவும் உள்ளனர்.

இலங்கைத் தமிழர் சமுதாயம் பிரதானமாக வடக்கு மாகாணத்தில் அதிகம் செறிந்துள்ளதுடன், மொழிக் கொள்கை காரணமாக அனுகூலம் குறைந்தவர்களாக்கப்பட்டுமுள்ளதுடன் அதுவே இன ரீதியிலான யுத்தம் விளையக் காரணமும் ஆகியது. பெரும்பான்மைச் சமுதாயத்திலுள்ள பெண்களைப்போன்று இச்சமுதாயத்திலுள்ள பெண்களும் அனுகூலம் குறைந்தவர்களாக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள தடைசெய்த ஆள்சார் சட்டம் மற்றும் சமூக - கலாசார நியமங்கள் முதலியன மூலம் அனுகூலம் குறைந்தவர்களாக்கப்பட்டுள்ளனரென்பதிற் சந்தேகமில்லை. பெருந்தோட்டத் தமிழர் சமுதாயம், மரபுரிமைப் பண்பாகச் சமூக - பொருளாதாரம் பிரதிகூலத்தைக் கொண்டுள்ளனர். 19 ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் இறுதிவரை வெறுமனே தொழில் முறைக் கட்டுப்பாட்டு ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளராக நாட்டுக்குக் கொண்டுவரப் பட்டு, பெருந்தோட்ட வேற்றுநாட்டினர் எல்லைக்குட்பட்ட நிலப் பகுதிக்குள்ளேயே முடக்கப்பட்டிருந்தனர் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குடியேற்ற நாட்டு நிருவாகம் மகப்பேற்று நன்மைகளையும் கல்வியையும் அறிமுகப்படுத்தியிருந்தபோதிலும், இலங்கையில் சுதந்திரத்துக்குப்பின்னர் இடம் சமூக வளர்ச்சி முதலானவற்றில் ஏற்பட்ட அபிவிருத்தி காரணமாக அவர்கள்

புறக்கணிக்கப்பட்டனர். மிக அண்மைக் காலம் வரையிலான அவர்களது வாக்குரிமை பறிக்கப்படல் போன்ற அரசியல் நிலைமாற்ற நடவடிக்கைகளாலும் அவர்கள் பாதிக்கப்பட்டனர். தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புதலின் சிக்கல்களினாலும் பெருந்தோட்டங்களிலும் வீடமைப்பதற்கான அல்லது காணி கொள்வதற்கான தனிப்பட்ட உரிமைகளின் மறுப்பினாலும் பெருந்தோட்டக் குடும்பங்களிலுள்ள பெண்கள், ஆண் அடக்கியாளுகைக்கும் பால் சமத்துவமின்மைக்கும் கீழ்ப்பட்டவர்களாக்கப்பட்டுள்ளனரென்பதுடன், ஆக்கப்பட்டும் வருகின்றனர். பிள்ளைகளை வேலைக்கமர்த்தும் நடவடிக்கைகள், சம்பவங்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் மிக அண்மைக்காலமாக பெருமளவில் இடம்பெற்று வந்துள்ளன. முதாதையரது ஆள்புலத்தில் வாழ்கின்ற வேடர்கள் சமூகப் புறக்கணிப்புக்குப் பலியானோராகவுள்ளனர்; அதேவேளை அரசினால் மகாவலிப் பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ளவர்கள் சமவாய்ப்பை எய்துகின்ற நிலைமையில் இன்னமும் இல்லை. வசதி வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட சாதிக் குழுக்கள், தனிப்படுத்தப்பட்ட சமுதாயங்களாக அல்லது நாடோடிக் குடும்பங்களாக வாழ்ந்து வருபவர்கள் அரசியலமைப்பிலுள்ள உரிமைகளைத் துய்ப்பதில் ஓரங்காட்டவும்படுகின்றனர். இச் செயற்றிட்டத்தில் சிறப்புக் கவனத்திற்குரியதான அம்பாறை மாவட்டம், 41.6சதவீத இலங்கை முஸ்லிம்களையும், 39.3சதவீதச் சிங்களவர்களை யும், 18.7சதவீத இலங்கைத் தமிழர்களையும் 0.03சதவீத மலே மக்களையும் கொண்ட பல்லின மக்களடங்கிய மாவட்டமாகும். (2001 ம் ஆண்டு சனத்தொகை கணப்பு)

இச்சிற்றேடு, சட்டக் கட்டுக்கோப்பிலும் அபிவிருத்திக் கொள்கைகளிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் பெண்கள் மற்றும் பிள்ளைகள் முதலானோரது உரிமைகளினதும் சிறுபான்மையோரது உரிமைகளினதுமான இருதள முகப்புகளைப் பரிசோதனை செய்கின்றது.

## II சட்டக் கட்டுக்கோப்பு

அரசியலமைப்பு

இலங்கை அரசியலமைப்பு, எல்லாப் பிரசைகளுக்கும் அவர்களின் அடிப்படை உரிமைகள்பற்றிய குறித்த சில உத்தரவாதங்களைக் கொடுக்கின்றது. இவ்வுரிமைகள், அரசியலமைப்பின் IIIஆம் அத்தியாயத்தில் அடங்கியுள்ளன. இவ்வுரிமைகள் பெண்களுட்பட, சிறுபான்மையோருக்கு ஏற்புடையனவாகும். முக்கியமான உரிமைகளுட் சில கீழே ஆராயப்படுகின்றன.

11ஆம் உறுப்புரையின்படி, ஆளெவரும், சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது கீழ்த்தரமான நடவடிக்கைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது. ஒரு பெண்ணைக் கற்பழித்தல் அல்லது பால்சார் விதியில் வன்செயலுக்குட்படுத்தல் சித்திரவதை, அல்லது கொடூரமான, மனிதத்தன்மையற்ற மற்றும் கீழ்த்தரமான நடாத்துகையின் வரைவிலக்கணத்துக்குள் வரும்.

ஆளெவரும், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்கவன்றிக் கைதுசெய்யப்படுதலாகாதென 13ஆம் உறுப்புரை கூறுகின்றது.

பெண்கள் உட்பட, சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற மிகவும் முக்கியமான உறுப்புரை அரசியலமைப்பின் 12ஆம் உறுப்புரையாகும்; ஆட்கள் எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமாகவுள்ளனரென்றும் சட்டத்தின் சமப் பாதுகாப்புக்கு உரித்துடையவர்களென்றும் இது கூறுகின்றது. ஆளெவருக்குமெதிராக, இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் என்ற ஏதுக்களின்மீது அல்லது அத்தகைய ஏதுக்களுள் ஏதேனுமொன்றின்மீது ஓரங்காட்டப்படுதலாகாதென அது மேலும் கூறுகின்றது. ஆகவே, பெண்கள் உட்பட எல்லாப் பிரசைகளுக்கும் அரசியலமைப்பு சமத்துவத்தை உத்தரவாதமளிக்கின்றது.

வெளியிடுதலுட்பட பேச்சு, வெளிப்படுத்தற் சுதந்திரம், சமாதானமுறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்; ஒன்றுசேர்வதற்கான உரிமை;

ஒரு தொழிற்சங்கத்தை அமைப்பதற்கும் சேர்வதற்குமான சுதந்திரம்; ஒன்றில் தாமாகவோ அல்லது மற்றவர்களுடன் சேர்ந்தோ அத்துடன் பகிரங்கமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ, வழிபாட்டில், அனுட்டிப்பதில், வழக்கத்தில் அத்துடன் போதனையில் அவளது மதத்தை அல்லது நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம்;

தாமாகவோ அல்லது மற்றவர்களுடன் சேர்ந்தோ அல்லது சொந்தக் கலாச்சாரத்தைத் துய்ப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான அவளது சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கான சுதந்திரம்;

தாமாகவோ அல்லது மற்றவர்களுடன் சேர்ந்தோ ஏதேனும் சட்டமுறையான தான்புரிதொழிலில், உயர்தொழிலில், வியாபாரத்தில், தொழிலில் அல்லது தொழில்முயற்சியில் ஈடுபடுவதற்கான சுதந்திரம்; அத்துடன்

இலங்கையினுள் நடமாடுவதற்கும் அவளது வதிவிடத்தைத் தெரிவுசெய்வதற்குமான சுதந்திரமும் இலங்கைக்குத் திரும்பிவருவதற்கான சுதந்திரமும்.

இவ்வுரிமைகள் எல்லாம் நீதிமன்ற விசாரணைக்குட்பட்டவை. இதன் பொருள் என்னவெனில், அவற்றைத் துய்ப்பதிலிருந்து ஆளொருவரை அரசு தடுக்குமாயின், ஒரு பரிகாரத்துக்காக அத்தகைய ஆள் உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைக் கோப்பிடமுடியும் என்பதாகும்.

எவ்வாறாயினும், அரசியலமைப்பின்கீழ் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதிலிருந்து பெண்களைத் தடுக்கக்கூடிய, அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகளிலான சில வரையறைகளுண்டு. இவ்வரையறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்கை, உரிமைகள் அரசினால் மீறப்பட்டால் மட்டுமே உயர் நீதிமன்றத்தில் கோப்பிடமுடியும். இவ்வுரிமைகள் தனிப்பட்ட ஆளொருவரினால் அல்லது ஒழுங்கமைப்பினால் மீறப்படின், பரிகாரமெதுவும் இருக்காது. அரசியலமைப்பின்படி அத்தகையதொரு வழக்கைக் கொண்டுவருவதற்கு இன்னலுறும் ஆளுக்குப் போதிய காலத்தைக் கொடுப்ப தில்லை.

பல பெண்களுக்கு அத்தகைய வழக்குகளைக் கொண்டு வருவதற்கான இயலுமாந்தன்மை இல்லை. ஆனால் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு மட்டுமே அவ்வாறு செய்யமுடியும். அவளுக்கு உதவிசெய்வதற்கு விரும்பக்கூடிய ஏனையோர் அவளது சார்பிலும் அவளது பெயரிலும் வழக்கைக் கொண்டுவரமுடியாது. இலங்கையிலுள்ள பல சட்டங்கள் பெண்களுக்கெதிராக ஓரங்காட்டுகின்றன. கீழே விபரிக்கப்பட்டவாறு குறித்த சில சமுதாயங்களுக்கு ஏற்புடையனவாகின்ற ஆள்சார் சட்டங்களில் இவ்வேற்பாடுகளுட் பல காணப்படுகின்றன. எவ்வாறாயினும், அரசியலமைப்பு சட்டமாக்கப்படுமுன்னர் இச்சட்டங்கள் வலுவில் இருந்தமையினால், பெண்ணொருத்தியின் சமத்துவத்துக்கான உரிமை அவற்றின் கீழ் மீறப்படின், அவர் முறைப்பாடு செய்யமுடியாது.

பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதனை உறுதிப் படுத்துவதற்கு இவையெல்லாம் எதிர் நோக்கப்படவேண்டிய பிரச்சினைகளாகவுள்ளன.

### சர்வதேசக் கட்டுப்பாடுகள்

பெண்களுக்கெதிரான எல்லா வகையினவையுமான ஓரங்காட்டுதலையும் நீக்குதல்பற்றிய ஐநா சமவாயத்தை(பெஓநிச) இலங்கை உறுதிப்படுத்தியுள்ளது. நாட்டிலுள்ள பெண்களின் நிலைமை மேம்படுத்தப்படுவதனையும் அவர்கள் உரிமைகளையும் சமநடாத்துகையையும் பெறுவதனையும் உறுதிப்படுத்துவதற்கு அது சர்வதேசக் கடப்பாடுகளை உற்றிருக்கின்றது. இலங்கை அரசாங்கம்

பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கு எடுக்கின்ற நடபடிகள் தொடர்பாக அது பெஒநீ குழுவுக்குக் காலத்துக்குக்காலம் அறிக்கையிடுதல் வேண்டும்.

பிள்ளைகளின் உரிமைகள்பற்றிய ஐநா சமவாயத்தையும் இலங்கை உறுதிப்படுத்தியுள்ளது. பிள்ளைகளின் மனித உரிமைகள் எல்லா நாடுகளினாலும் பாதுகாக்கப்பட்டு உத்தரவாதமளிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு இச்சமவாயம் சர்வதேச நியமங்களைத் தருகின்றது. ஆகவே, இலங்கையும், பிள்ளைகள் தொடர்பாகக் குறித்தசில நியமங்களைப் பேணுவதற்குச் சர்வதேசக் கடப்பாடுகளை உற்றுள்ளது.

தேசியக் கொள்கை ஆவணங்கள் பெண்களின் பட்டயம்

பெண்களின் பட்டயம், 1993ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும், பெண்களின் உரிமைகள் தொடர்பாக அரசின் நிலைமையைத்தருகின்றதுமான ஓர் ஆவணமாகும். ஏற்பாடுகளானவை, பெண்கள்பற்றிய ஐநா சமவாயத்தின் அடிப்படையிலானவை. பட்டயத்தில் குறித்துரைக்கப்பட்ட உரிமைகளுக்கும, நெறிகளுக்கும், கொள்கைகளுக்கும், எல்லா ஆட்களினாலும், நிறுவனங்களினாலும், ஒழுங்கமைப்புகளினாலும், தொழில் முயற்சிகளினாலும், மரியாதை செலுததப்பட்டு அவர்களின்/ அவற்றின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதல் வேண்டுமெனப் பட்டயத்துக்கான முன்னுரை(முகவுரை) கூறுகின்றது. எவ்வாறாயினும், பட்டயமானது சட்டப்படியாகப் பிணிக்கின்ற ஓர் ஆவணமல்லவென்பதை நினைவுகூர்தல் முக்கியமானதாகும். இதன்பொருள் என்னவெனில், அரசியலமைப்பிலும் ஏனைய சட்டங்களிலும் உள்ள அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகளைப் போலல்லாது, அதன் ஏற்பாடுகள் ஒரு நீதிமன்றத்தினால் வலுவுறுத்தப் படமுடியாதவை என்பதாகும். எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் பெண்களின் நிலைமையை எவ்வாறு சீராக்கமுடியும் என்பது பற்றிய வழிகாட்டுநெறியாக மட்டுமே அதனைப் பயன்படுத்த முடியும்.

பின்வரும் துறைகள் தொடர்பான ஏற்பாடுகளைப் பட்டயம் கொண்டுள்ளது:

அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள்

குடும்பத்தினுள்ளான உரிமைகள்

கல்விக்கும் பயிற்சிக்குமான உரிமை

பொருளாதாரச் செயற்பாட்டுக்கும் நன்மைகளுக்குமான உரிமை

உடனலக் கவனிப்புக்கும் போஷாக்குக்குமான உரிமை

சமூக ஓரங்காட்டுதலுக்கெதிரான பாதுகாப்புக்கான உரிமை

பால் அடிப்படையிலான வன்செயலுக்கெதிரான பாதுகாப்புக்கான உரிமை(அதாவது பெண்களுக்கெதிரான வன்செயல்)

பிள்ளைகளின் பட்டயம்

பெண்களின் பட்டயத்தைப்போன்று, பிள்ளைகளின் பட்டயமும் இலங்கையிலுள்ள பிள்ளைகள் தொடர்பான அரசாங்கக் கொள்கையைத் தருகின்றது. பட்டயத்தில் மேவப்பட்ட முக்கிய துறைகள் கிழே தரப்படுகின்றன.

ஓரங்காட்டாமை

பிள்ளையின் மிகச்சிறந்த நலன்கள்

குடும்ப வாழ்வும் பெற்றோரின் உரிமைகளும் பொறுப்புடைமைகளும்

வாழ்க்கைக்கும், உயிரோடிருப்பதற்கும், அபிவிருத்திக்குமான உரிமைப் பெயரும் நாட்டினமும்

ஆளடையாளத்தைப் பேணிக்காத்தல்

தோதான தகவலை அணுகுதல்

நிந்தனையிலிருந்தும் அலட்சியத்திலிருந்தும் பாதுகாத்தல்

மகவேற்பு

அகதிப் பிள்ளைகள்

உடலியலாமையுள்ள பிள்ளைகள்

சுகாதாரம்

வாழ்க்கைத் தராதரம்

கல்வி

பிள்ளைகளைத் தொழிலுக்கமர்த்தல், போதைப்பொருள்

துர்ப்பிரயோகம், மற்றும் பிள்ளைகளைக் கொண்டு வியாபாரஞ்செய்தல், பாலரீதியில் பயன்படுத்தப்படுதல், விற்பனைசெய்தல் அத்துடன் ஆட்கடத்தல் என்பவற்றிலிருந்து பாதுகாத்தல். சித்திரவதையிலிருந்தும், சுதந்திரம் பறிக்கப்படுவதிலிருந்தும், ஆயுதந்தாங்கிய யுத்தத்திலிருந்தும் பாதுகாத்தல்.

சிறுபான்மையோர் பிள்ளைகள் தொடர்பான ஏற்பாடு குறிப்பாக இயைபானதாகும்; "ஒரு சிறுபான்மையைச் சேர்ந்த பிள்ளை அல்லது சுதேசப் பிள்ளை, அவரது அல்லது அவளது தொகுதியின் ஏனைய உறுப்பினர்களுடன் சேர்ந்து, அவரது அவளது தொகுதியின் ஏனைய உறுப்பினர்களுடன் சேர்ந்து, அவரது அல்லது அவளது சொந்தக் கலாச்சாரத்தைத் துய்ப்பதற்கு, அவரது அல்லது அவளது சொந்த மதத்தைப் பின்பற்றுவதற்கும் வழிபடுவதற்கும், அல்லது அவரது அல்லது அவளது சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கும் அவருக்கு அல்லது அவளுக்கு உள்ள உரிமை மறுக்கப்படுதலாகாது" என இது கூறுகின்றது.

## சட்டவலுவுறுத்தும் குற்றவியல் நீதியும்

பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எதிரான வன்செயல்

வேறவரேனும் ஆளுக்கெதிராகப் புரியப்படக்கூடிய குற்றவியல் தவறுகளைக் கொண்டுள்ள சட்டம் தண்டனைச்சட்டக் கோவையாகும். அது வேறுபாடின்றி இலங்கையிலுள்ள எல்லாச் சமுதாயங்களுக்கும் ஏற்புடையதாகும். சட்டக்கோவையிலுள்ள பல்வேறு ஏற்பாடுகள் பெண்களுக்கெதிராகப் புரியப்படும் தவறுகள் தொடர்பானவை. இத்தவறுகள், கற்பழித்தல், பால்ரீதியிலான தொந்தரவு, முறைதகாப் புணர்ச்சி, பாரதூரமான பால்ரீதியிலான துர்ப்பிரயோகம், மற்றும் பிள்ளைகளைக் கொண்டு வியாபாரஞ்செய்தல் என்பவற்றை உள்ளடக்கும். தீங்குவிளைவித்தல் அல்லது பாரதூரமான தீங்குவிளைவித்தல் போன்ற தவறுகளும் பெண்களுக்கெதிராகப் புரியப்படலாம். குடும்ப வன்செயல் இலங்கையில் ஒரு பாரதூரமான பிரச்சினையாக விருப்பதுடன், எல்லாச் சமுதாயங்களையும் சேர்ந்த பெண்களைப் பாதிக்கின்ற போதிலும், அதனை எதிர்நோக்குவதற்கான சட்டமெதுவும் இன்னமும் இல்லை.

கற்பழித்தலுக்கான ஏற்பாடுகள் 1995ஆம் ஆண்டில் ஒரு புதிய சட்டத்தினால் திருத்தப்பட்டு இன்னமும் கட்டிறுக்கமானதாக்கப்பட்டன. கற்பழித்தலுக்கான தண்டனைகளும் அதிகரிக்கப்பட்டன. துரதிஷ்டவசமாக, சட்டங்கள் பலப்படுத்தப்பட்டிருந்த போதிலும், வன்செயலிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்குப் பொலிசார் அதிக முக்கியத்துவம் அளிக்காதமையினால் சட்டத்தை வலுவுறுத்தல் இன்னமும் ஒரு பிரச்சினையாகவுள்ளது.

1995ஆம் ஆண்டின் புதிய சட்டம், பிள்ளைகளுக்கெதிராகப் புரியப்படமுடியுமான பல்வேறு புதிய தவறுகளையும் அறிமுகப்படுத்திற்று. இது, எல்லாச் சமுதாயங்களையும் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஏற்புடையதாகின்றது. புதிய ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் ஆபாசமான வெளியீட்டுக்குப் பிள்ளைகளைப் பயன்படுத்துதலும், பிள்ளைகளைக் கொடுமைப்படுத்தலும், பிள்ளைகளைக் கொண்டு வியாபாரஞ் செய்தலும் தவறாகும்.

ஆள்சார் சட்டங்கள்

இலங்கையிலுள்ள வித்தியாசமான இனரீதியிலான மற்றும் மதஞ்சார் சமுதாயங்கள், திருமணம், மணநீக்கம், ஆதனத்தை மரபுரிமையாகப் பெறுதல் முதலியன போன்ற விடயங்கள் தொடர்பாக அவர்களின் ஆள்சார் சட்டங்களினால் ஆளப்படுகின்றன. மற்றெல்லாம் நாட்டின் பொதுச் சட்டத்தினால் ஆளப்படுகின்றன. ஆள்சார் சட்டங்கள் பெண்களுக்கு ஓரங்காட்டுகின்ற குறித்த சில ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன.

தேசவழமை

தேசவழமையானது, வடக்கு மாகாணத்தில் வசிக்கின்ற தமிழர்களுக்கு ஏற்புடையதாகும். இந்தச் சட்ட முறைமையின் கீழ், திருமணஞ் செய்த ஒரு பெண்ணுக்கு ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கும் அவளுக்குச் சொந்தமானதாக இருப்பினுங்கூட அசைவற்ற ஆதனத்தைக் கைமாற்றுவதற்கும் அவளின் கணவனினது சம்மதம் தேவையாகவுள்ளது.

முஸ்லிம் சட்டம்

முஸ்லிம் சட்டமானது, நாடு பூராகவுமுள்ள எல்லா முஸ்லிம்களுக்கும் ஏற்புடையதாகும். இந்தச் சட்டமுறைமை, ஆகக்குறைந்த திருமண வயதுக்கு ஏற்பாடு செய்வதில்லை. 1995ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆகக்குறைந்த திருமண வயது, கற்பழித்தல் சட்டங்களினால் ஆளப்பட்டது; இவை, 12 வயதுக்குக் குறைவான ஒரு பெண்ணுடனான பாலுறவைத் தடைசெய்கின்றன. 1995ஆம் ஆண்டில் இந்த ஆகக் குறைந்த வயது, 16 வயதாக அதிகரிக்கப்பட்டது, ஆனால் முஸ்லிம்கள் இவ்வேற்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டனர். ஆகவே 12 வயதினரான முஸ்லிம் பெண்பிள்ளைகளை அவர்களின் சம்மதமில்லாமலே திருமணம் செய்துகொடுக்க முடியும்.

முஸ்லிம் பெண்கள் ஓரங்காட்டுதலுக்கு முகங்கொடுக்கின்ற இன்னுமொரு துறை மணநீக்கம் தொடர்பானதாகும், ஒரு முஸ்லிமாகவுள்ள ஆண், ஏதேனும் காரணம் கொடுக்காமல், அவரது மனைவியை மணநீக்கஞ் செய்யலாம். எவ்வாறாயினும், முஸ்லிமாகவுள்ள பெண்ணொருத்தி அவளது கணவனை மணநீக்கஞ் செய்யவிரும்பினால், அவர் தன்னைக் கொடுமைப்படுத்தினாரெனக் காட்டுதல் வேண்டும் அல்லது அவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக உள்ளனரோ அந்தப் பிரிவை ஆளுகின்ற சட்டத்தின் கீழ் ஒரு தவறாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறேதேனும் காரணத்தைக் காட்டுதல் வேண்டும்.

மரபுரிமை தொடர்பாகவும், மகன்மாரைப் பார்க்கிலும் மகள்மார் அவர்களின் தந்தையினது ஆதனத்தில் குறைந்த பங்குக்கே உரித்துடையவராகவுள்ளனர்.

கண்டியச் சட்டம்

கண்டியச் சிங்களவரை ஆளுகின்ற கண்டியச் சட்டத்திலும் பெண்களுக்கெதிரான ஓரங்காட்டுதல் காணப்படுகின்றது. உதாரணமாக, உயிரோடிருக்கும் வாழ்க்கைத்துணை, இந்த

வாழ்க்கைத் துணையின் ஆதனத்தில் சீவிய உரித்தை மட்டுமே பெறுகின்றார். சட்டமானது ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்புடையதாக இருக்கின்றபோதிலும், உண்மையில் அது பெண் பிள்ளையை கூடுதலாகப் பாதிக்கும்; ஏனெனில், குறிப்பாக, அவர்களின் வாழ்க்கைத்துணை இறந்த பின்னர் அவர்கள் வழமையாகக் குறைதலான பொருளாதார, மூலவளங்களை உடையவர்களாக இருப்பதனால் அவர்களுக்குக் கூடுதலான பொருளாதார ஆதாரம் தேவையாகவிருக்கும்.

மணநீக்கம் தொடர்பாகவும் பெண்களுக்கெதிராக ஓரங்காட்டுதலுண்டு. கணவன் ஒருவர், திருமணத்துக்குப் பின்னர் புரியப்பட்ட சோரம் என்ற ஏதுக்களின் மீது தனது மனைவியை மணநீக்கஞ் செய்யலாம், ஆனால் அதே ஏதுக்களின்மீது தனது கணவனை மணநீக்கஞ் செய்ய விரும்பும் மனைவி, மேலதிகமாக, முறைதகாப் புணர்ச்சியை அல்லது பாரதூரமான கொடுமைப்படுத்தலை எண்பித்தல் வேண்டும்.

ஏனைய சட்டங்கள்

பொதுவாகப் பெண்களுக்கெதிராக ஓரங்காட்டுகின்றவையும் எல்லாச் சமுதாயத்தினரான பெண்களுக்கும் ஏற்புடையனவாகின்றவையுமான வேறு சில சட்டங்களும் நிருவாக வழக்கங்களும் உள்ளன. உதாரணமாக, கமத்தொழிற் குடியிருப்புத் திட்டங்களில் அரச காணியின் மானியக் கொடைகள், பெண்களைப்பார்க்கிலும் ஆண்களுக்குச் சாதகமாக உள்ளன. மானியக் கொடைகள் பொதுவாக ஆண்களுக்கே வழங்கப்படுகின்றன. மேலும், மூல உரித்தை வைத்திருப்பவர் இறந்தபின்னர், அவர் ஒரு வழியுரிமையாளரைப் பெயர்குறித்து நியமித்திராவிடின், காணியின் வழியுரிமைக்கு உரித்துள்ளவர்களின் நிரல், பெண்களைப் பார்க்கிலும் ஆண் உரித்தாளர்களுக்கே சாதகமாகவுள்ளது. உதாரணமாக, வயதைப் பொருட்படுத்தாது, மகள்மாரைப் பார்க்கிலும் மகன்மாருக்கு முதலாவது முந்துரிமை இருக்கும்.

உரித்தை வைத்திருப்பவர், காணிக்கான வழியுரிமையாளராக அவரது

மனைவியைக் குறிப்பாகப் பெயர்குறித்து நியமித்திராவிடின், அவருக்கு வழியுரிமைக்கான முந்துரிமை இருக்கின்றபோதிலும், அவ்வுரிமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவள் மீண்டும் திருமணஞ்செய்தால், அவள் காணியைக் கைவிடுதல் வேண்டும். அவள் தனது முறையான வழியுரிமையாளரைப் பெயர்குறித்து நியமிப்பதற்கும் அனுமதிக்கப்படுவதில்லை.

விசேட வழிமுறைகள்

12ஆம் உறுப்புரையில் மிக முக்கியமான ஒரு பிரிவு உள்ளடக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின்படி அரசானது பெண்களினதும், பிள்ளைகளினதும், இயலாமைக்குட்பட்ட ஆட்களினதும் நிலைமையை முன்னெடுத்துச்செல்வதற்கு விசேட வழிமுறைகளை எடுக்கமுடியும். இதன்பொருள் என்னவெனில், ஆண்கள் தொடர்பாகப் பெண்களும் பிள்ளைகளும் அனுகூலம்குறைந்த நிலைமையில் உள்ளனர் என அரசியலமைப்பு ஏற்றுங்கீகரிக்கின்றது என்பதாகும். ஆகவே, ஆண்களுக்குக் கொடுக்கப்படாத நன்மைகளை இந்த விசேட வழிமுறைகள் அவர்களுக்குக் கொடுத்தாலுங்கூட, ஆண்களைப் போன்ற அதே நிலைமைக்கு அவர்களை உயர்த்துவதற்கென அது அனுமதிக்கப்படும்.

சட்டங்களிலான மாற்றங்களுக்கான விதப்புரைகள்

பெண்கள் தமது அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பரிகாரங்களைப் பலப்படுத்துவதற்கு ஏற்ப அரசியலமைப்பு திருத்தப்படல் வேண்டும். குறித்த விடயங்கள் பின்வருமாறு:

ஒரு மாதக் காலப்பகுதி போதாமையினால், எந்தக் காலப்பகுதியினுள் அடிப்படை உரிமைகள் வழக்கொன்றைக் கொண்டுவர முடியுமோ அந்தக் காலப்பகுதியை நீடித்தல்.

பெண்களுக்கெதிராக ஓரங்காட்டுகின்ற முன்னைய சட்டவாக்கங்களைப் பரிசீலனைசெய்வதற்கும் அத்தகைய சட்டங்களைச் செல்லுபடியற்றனவென வெளிப்படுத்துவதற்கும் நீதிமன்றங்களுக்குத் தத்துவமளிக்கப்படல் வேண்டும்.

அரசு மட்டுமே பெண்களின் உரிமைகளை மீறக் கூடியதாக இராதிருப்பதனால், அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகள் தனியார் துறைக்கும் நீடிக்கப்படுதல் வேண்டும். பெண்களுக்கெதிராக அடிக்கடி ஓரங்காட்டப்படும், தொழில்போன்ற துறைகளில் இது குறிப்பாக முக்கியமாகவுள்ளது.

அக்கறைகொண்டுள்ள ஆட்களும் தொகுதிகளும், நீதிமன்றங்களில் வழக்குகளைக் கொண்டு வருவதற்கு இயலாதுள்ள பெண்களின் சார்பில் தாமே அவ்வாறு செய்வதனை இயலச் செய்வதற்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

அத்துடன் சேர்த்து, பெண்களுக்கெதிராக ஓரங்காட்டுகின்ற ஏற்பாடுகளைக் கொண்டுள்ள எல்லாச் சட்டங்களும் மீளாயப்பட்டுத் திருத்தப்படல் வேண்டும் - உதாரணமாக, காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம்.

அரசியலமைப்பு இதற்காக ஏற்பாடுசெய்வதனால், பெண்கள் உண்மையாகச் சமவுரிமைகளைத் துய்க்காத துறைகளிலும் அவர்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் துறைகளிலும், பெண்களின் அந்தஸ்தை மேம்படுத்துவதற்கு அவசியமானவிடத்து, விசேட வழிமுறைகள் செயற்படுத்தப்படல் வேண்டும்.

## III அபிவிருத்திக் கொள்கை

இலங்கையில் அபிவருத்திக் கொள்கைகள், தெளிவான கட்டுக்கோப்பையோ, தொடர்ச்சியையோ கொண்டிருக்க வில்லையென்பதுடன், அதற்குப்பதிலாக, திட்டமிடுதற் செயல்முறையில் நிமித்தத்தன்மையின் அமர்வொன்றைக் கொண்டிருந்தன. எவ்வாறாயினும், அரசப் பேரவை நிருவாகத்தின் (1939-47) ஆக்கபூர்வமான கல்விக் கொள்கைகள், எல்லாப் பிள்ளைகளுக்குமான கல்விபற்றித் தெளிவாக நோக்கின.

1975ஆம் ஆண்டில் சர்வதேச மகளிர் ஆண்டுவரை, மகப்பேற்றைப் பற்றிய குறிப்பீடு தவிர்ந்த ஏனைய திட்டங்களில் பெண்கள் பற்றி எதுவுமே இல்லை. அப்போதிருந்து 'பால் சார்பற்றவை' எனக் கருதப்பட்ட அபிவிருத்திக் கொள்கைகள், பெண்களின் பலதிறப்பட்ட பங்கேற்புகள் தொடர்பிலும் பெண்களின்மீது கொள்கைகளின் தாக்கங்கள் தொடர்பிலும் 'பால் புலப்படாதவையாக' இருந்துள்ளன. அபிவிருத்திக் கொள்கைகளில் பால் நெறிப்படுத்துகை, அதுபற்றித் திட்டமிடுதற் செயல்முறையில், தரவு சேகரிப்பதில், காட்டிகளின் அபிவிருத்தியில் அல்லது தாக்க மதிப்பீட்டில் சிறிய அளவிலான சான்று உள்ளமையினால், அது இன்னமும் ஓர் இலக்காகவே உள்ளது.

மத்திய மட்டத்திலிருந்து உள்ளூர் மட்டம் வரையில் திட்டமிடுதற் செயல்முறையில் சம்பந்தப்பட்டுள்ள பல ஆட்கள் பால் பிரச்சினைகள் பற்றி அறியாதுள்ளனரென்றும், பால் உணர்திறன் திட்டமிடுதலிலும் மதிப்பீட்டிலும் ஈடுபடுவதற்கான நுட்பங்களைக் கொண்டிருக்கவில்லையென்றும் அண்மைய ஆய்வு கண்டுபிடித்தது. தற்போதைய எடுத்துக்காட்டொன்று, வறுமைகுறைப்பு உத்திக்கும், புதிய தொழிற் கொள்கை, பெண்களுக்கான தேசிய நடவடிக்கைத் திட்டம் என்பவற்றுக்கிடையே இணைப்புகள் இல்லாமையாகும்; இவை மூன்றும் 2002ஆம் ஆண்டில் பரப்பப்பட்டன. பிள்ளைகளின் விடயத்தில், கொள்கைகளிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் ஓரப்படுத்தப்படும் சாத்தியங்கொண்ட இயலாமைக்குட்பட்ட பிள்ளைகள், தெருப்பிள்ளைகள், வேலைசெய்யும் பிள்ளைகள், கைவிடப்பட்டு இலம்பாடுற்ற பிள்ளைகள், விளக்கமறியல் மனைகளில், தடுத்துவைத்தல் நிலையங்களில் மற்றும் மறியற்சாலைகளில் உள்ள பிள்ளைகள், மற்றும் ஆயுதந்தாங்கிய யுத்தங்களில் பலியானவர்கள் போன்ற எளிதில் தாக்கமுறத்தக்க தொகுதிகள் உள்ளன.

வறியோரின், சமூகரீதியில் பறிக்கப்பட்ட நிலையிலுள்ள சமுதாயங்களின் மற்றும் பெண்களினதும் பிள்ளைகளினதும் உரிமைகள்பற்றிய முழுமைப் படைப்புக் கோட்பாட்டு நோக்கு இல்லாமை, சனத்தொகையின் எல்லாப் பகுதியினரிடையேயும் அபிவிருத்தி நன்மைகளை ஒப்புரவான முறையில் பகிர்ந்தளிப்பதற்குப் பாரியதடையாகவிருந்துள்ளது. எல்லா மட்டங்களிலுமான கொள்கை ஆக்குநர்கள் திட்டமிடுவோர், மற்றும் செயற்படுத்துவோர் ஆகியோருக்கிடையே மனித உரிமைகள், மனித அபிவிருத்தி, சமூக ஒப்புரவு மற்றும் பால் சமத்துவம் என்பவைவற்றின் கட்டுக்கோப்பிலுள் கொள்கைகளிலும், திட்டங்களிலும், நிகழ்ச்சித் திட்டங்களிலும், கூறுணர்ச்சிப்பாடு மற்றும் விழிப்புணர்ச்சி உருவாக்கத்துக்கும், அனுகூலம் குறைந்த சமுதாயங்கள் பற்றித் தரவுகளின் பால் முழுமைப்பாடின்மைக்கும், தரவுகளைச் சேகரிப்பதற்கும், அனுகூலம் குறைந்த சனத்தொகுதிகளில் உள்ளோர் உட்பட, பெண்களினதும் பிள்ளைகளினதும் தேவைகளை நெறிப்படுத்துவதற்கும், அவசரத் தேவையுண்டு.

## கல்வி கொள்கைக் கட்டுக்கோப்பு

சர்வதேச நியமங்களும் சாதனங்களும் விரிவாக்கமடைவதற்கு முந்திய ஆறு தசாப்த காலத்திலிருந்து கல்விக்காக, பிள்ளைகள் எல்லோருக்குமுள்ள உரிமைகள் இலங்கையில் ஏற்றுங்கீகரிக்கப்பட்டுள்ளன. கல்விக்கான 'சனநாயக உரிமையை' உறுதிப்படுத்துவதற்கும், எல்லோருக்குமான கல்விமூலம் மேல்நோக்கிய சமூக-பொருளாதார இயக்கத்துக்கான வாய்ப்பை அளிப்பதற்கும், சமூக-பொருளாதார சமமின்மைகளைக் குறைப்பதற்கும் 1945ஆம் ஆண்டில் இலவசமான ஆரம்பநிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. வருந்தத்தக்கவகையில், 1939ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, கல்விக் கட்டளைச்சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளினூடாகக் கட்டாயக் கல்வியை வலுவுறுத்துவதனை இயலச் செய்யும் சட்டவாக்கங்கள் ஐம்பது

ஆண்டுகளுக்கு மேலாக அறிமுகப்படுத்தப்படவில்லை. எனினும் குறிப்பாக இரண்டாம் நிலை மற்றும் உயர் கல்வி மட்டங்களில் பால், வகுப்பு, இனரீதி அல்லது சாதி என்பவற்றைப் பொருட்படுத்தாது, இலவசக் கல்வியையும் புலமைப்பரிசில்கள் போன்ற ஊக்குவிப்புகளையும் வழங்கியமை, 1960ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் பொதுக் கல்விக்கான அணுகுகையில் பால் சமத்துவத்தை விளைவித்த உந்துதலை உருவாக்கிற்று. அதேநேரத்தில், வறுமையும் கொள்கை முன்னுரிமைகளிலான மாற்றங்களும், முதலாம் தரத்திலிருந்து பதினொராம் தரம் வரை இலவசப்பாடப் புத்தகங்களும் பாடசாலைச் சீருடைகளுக்கான இலவசத் துணிகளும் போன்ற மேலதிக ஊக்குவிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டமையைப் பொருட்படுத்தாது, ஆரம்பநிலைக் கல்வி மட்டத்திலுங் கூட அனைத்துலகக் கல்வியின் எய்துகையைத் தடுத்துள்ளன.

கடந்த தசாப்தத்தின்போது இலங்கையானது சர்வதேசச் சாதனங்களை உறுதிப்படுத்தியுள்ளது – பெண்களுக்கெதிரான எல்லா வகையினவையுமான ஒரங்காட்டுதலை நிக்குதல் பற்றிய சமவாயமும் (பெஒநீச) பிள்ளையின் உரிமைகள் பற்றிய ஐநா சமவாயமும்(பிஉச) – சனத்தொகையின் எல்லாப் பிரிவினருக்கும் கல்வி வாய்ப்புகளை நீடிப்பதில் அக்கறையை உருவாக்கியுள்ளன. 'எல்லோருக்குமான கல்வி' பற்றிய ஜொமிட்டியன் வெளிப்படுத்துகையையும் 1990ஆம் ஆண்டில் புறக்குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சாதனங்களும் பிரகடனங்களும், கட்டாயமான, இலவசக் கல்விக்கு எல்லாப் பிள்ளைகளுக்குமுள்ள உரிமையை வற்புறுத்தியுள்ளன. சிறுபான்மைத் தொகுதிகளிலுள்ள பிள்ளைகளுக்குள்ள தமது சொந்த மொழி, மதம் மற்றும் கலாசாரம் என்பவற்றுக்கான உரிமையையும், இயலாமைக்குட்பட்ட பிள்ளைகளுக்கும் அகதிச் சனத்தொகைகளிலுள்ள பிள்ளைகளுக்கும் உள்ள கல்விக்கான உரிமையையும், மனித மதிப்புக்கு இசையவுள்ள பாடசாலைகளிலான ஒழுக்காற்றையும், பிள்ளையின் ஆளுமையை அபிவிருத்தி செய்தலையும்

அவர்களைப் பொறுப்புள்ள வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துதலையும், பால் ரீதியிலான துர்ப்பிரயோகத்திலிருந்தும் பொருளாதாரச் சுரண்டுதலிலிருந்தும் பிள்ளைகளைப் பாதுகாத்தலையும் பிஉச அதன் ஏற்பாடுகளில் உள்ளடக்கிற்று. மகளிர் பட்டயம் (1993) பத்தாண்டுக் கட்டாயக் கல்வியை முன்மொழிந்ததுடன், பெஒநீ சமவாயமும் மகளிர் பட்டயமும், பாடவிதானத்தில், கல்விச் சாதனங்களில் மற்றும் பாடசாலைச் சூழலில் பால் பங்களிப்பு மாறாநிலைப்படுத்தலை நீக்குவதற்கும் முதன்மையளிக்கின்றன.

இலங்கை அரசியலமைப்பு(1978) அதன் கொள்கைப் பணிப்புகளில், பின்வரும் இலக்கை எடுத்துக்கூறியது:-
"கல்வியறிவின்மையைப் பூரணமாக வேரோடு அழித்தலும் எல்லா மட்டங்களிலம் கல்விக்கான அனைத்துலக மற்றும் சமமான அணுகுகையை எல்லா ஆட்களுக்கும் உறுதிப்படுத்துதலும் (சட்டம் 27(2)) அத்துடன் பிள்ளைகளினதும் இளைஞர்களினதும் முழுமையான உடல், உள, ஒழுக்க,மத, சமூக அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் வகையில் அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்துதலும் சுரண்டுதலிலிருந்தும் ஓரங்காட்டுதலிலிருந்தும் அவர்களைப் பாதுகாத்தலும்." (சட்டம் 27(13).

1997ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள், 5 முதல் 14 வயதைக் கொண்ட தொகுதியினருக்குக் கட்டாயக் கல்வி ஒழுங்குவிதிகளை வலுவுறுத்தின. 'அதி திறமை நிலையம்' ஒன்றாக ஒவ்வொரு பிரிவிலும் ஆகக் குறைந்தது ஒரு பாடசாலையாவது தரமுயர்த்தப்படுதலை உத்தேசித்துள்ளன. அத்துடன் பிள்ளையின் முழுமைப் படைப்புக் கோட்பாட்டு அபிவிருத்தியையும் கல்வியிலான இயைபாந்தன்மையையும் அதி திறமையையும் மேம்படுத்துவதற்கு ஆரம்பநிலைக் கல்வியிலும், இரண்டாந்நிலை, பல்கலைக்கழக மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் கல்வியிலும் பாடவிதானச் சீர்திருத்தங்களைத் தொடங்கின.

இந்த ஆக்கபூர்வமான கொள்கைகள், 5 முதல் 14 வயதினரான தொகுதியிடையே கல்விப் பங்குபற்றுகையிலும் கல்வியறிவிலும் உறவடிப்படையில் உயர்ந்த காட்டிகளையும், பெருமளவினதான வறிய தொகுதியுடனான குறைந்த வருமானச் சமுதாயத்தில் இரண்டாந் நிலை மற்றும் உயர்கல்வியிலான கூடுதலாகப் பரந்ததாகவுள்ள சமூக அமைப்பையும் விளைவித்துள்ளது. எனினும், கல்விசார் ஏற்பாட்டில், பங்குபற்றுகையில் மற்றும் எய்துகையில் ஆன ஏற்றத்தாழ்வுகள், அனுகூலம் குறைந்த சமுதாயங்கள் கல்வியை அணுகுவதிலான குறிப்பிடத்தக்க சமத்துவமின்மையைப் பிரதிபலிக்கின்றன.

## கல்வியை வழங்குதல்

கல்வியை அணுகுவதில் முழுமொத்த பால் சமத்துவம், கூட்டுக் கல்விப் பாடசாலைகளின் உயர்ந்த நூற்றுவீதத்தின் மூலம் - எல்லா அரச பாடசாலைகளினதும் 96.6%-மேம் படுத்தப்பட்டுள்ளது; நாட்டிலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் இவை ஏறத்தாழ 97 சதவீதமாகவுள்ளன. ஒவ்வொரு தனியாளும், பாடசாலை முறைமை பூராகவும் அவரது/அவளது சொந்த மொழியில் கல்விகற்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார். உண்மையில், அரச பாடசாலைகளுள் 71.1 சதவீதமானவை சிங்கள மொழி மூலமும் 28.9 சதவீதமானவை தமிழ் மொழி மூலமும் தொழிற்பட்டன. (வருடாந்தப் பாடசாலை ஆட்டொகைக் கணிப்பு,2001). எவ்வாறாயினும், நகர, கிராமிய ஏற்றத்தாழ்வுகள் பரந்தனவாகவுள்ளன. நகர பாடசாலைகளுள் 26 சதவீதமானவற்றுடன் ஒப்பிடுகையில், கிராமிய பாடசாலைகளுள் 4 சதவீதமானவை மட்டுமே தரம் 12, 13 ஆகியவற்றுக்கு அறிவியற் கல்வியை வழங்குகின்றன. ஆகவே, கிராமியத் துறையில் வதிகின்ற எல்லா இனரீதியிலான தொகுதிகளிலுமுள்ள பெண்களும் பிள்ளைகளும் ஆரம்பநிலை, இரண்டாந்நிலைக் கல்விக்கான அணுகுகையில் அனுகூலம் குறைந்தவர் களாகவுள்ளனர். கிராமியத் துறையின் பாகமாகவுள்ள பெருந்தோட்டப் பெண்களும் பிள்ளைகளும், எஸ்ஐடீஏ

இடமிருந்தான பெருமளவிலான நன்கொடையளிப்போர் உள்ளீடுகள் அவர்களின் கல்வி வசதிகளைத் தொகையளவிலும் தர அளவிலும் 1990ஆம் ஆண்டுகளின் போது சீராக்கியுள்ளபோதிலும், அதிகமாக அனுகூலம் குறைந்தவர்களாக உள்ளனர். 'அபிவிருத்தியடைந்துவருகின்ற பொருளாதாரம்' ஒன்றின் மூலவளக் கட்டுப்பாடுகள் கல்வி வசதிகளுக்கான நிதியேற்பாட்டை வரையறுத்து, சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தான கடன்களின் மீது தங்கியிருப்பதனை அதிகரித்துள்ளது. கல்விச் செலவினம், 1960ஆம் ஆண்டுகளின் மு.உ. உற்பத்தியின் ஏறத்தாழ 5சதவீதத்திலிருந்து 1980ஆம் ஆண்டுகளில் 2 சதவீதத்துக்கும் 3சதவீதத்துக்கும் இடையே குறைந்து, 1990ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ 3.5சதவீதமாகவும், 1960ஆம் ஆண்டுகளில் வரவுசெலவுத்திட்டத்தின் ஏறத் தாழ 20சதவீதத்திலிருந்து 8-10சதவீதமாகவும் இருந்தது.

கல்வியில் பங்குபற்றுதல்

2001ஆம் ஆண்டின் ஆட்டொகைக்கணிப்பில், தரவுகள் கிடைக்கப்பெறவில்லை; ஆட்டொகைக் கணிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தினாலான மிகப்பெரிய தேசிய ஆய்வான சனத்தொகை ஆய்விலிருந்து (1994) புள்ளிவிபரங்கள் பெறப்படுகின்றன. ஆரம்பநிலைக் கல்வி வயதுத் தொகுதியினரில் (5-9வயது) ஆண், பெண் வயதுகுறித்த கல்விப் பங்குபற்றுகை வீதங்கள் 84.0 சதவீதமாகவும் 83.9 சதவீதமாகவும், கனிஷ்ட இரண்டாந்நிலை வயதுத் தொகுதியினரில் (10-14வயது) 94.3 சதவீதமாகவும் 94.4சதவீதமாகவும் இருந்தன; அதாவது 5-14 வரையிலான கட்டாய வயதுத் தொகுதியினரில் 53.4 சதவீதமும், 55.3 சதவீதமும், 20-24 வயதுத்தொகுதியினரில் 4.7 சதவீதமும் 4.6 சதவீதமும். பாடசாலைக் கல்வியின் எல்லா மட்டங்களிலும் இடாப்பிற் சேர்க்கப்பட்ட பெண்பிள்ளைகளின் நூற்றுவீதம், தரங்கள் 1-5 வரை 48.8சதவீதமும், தரங்கள் 6-8 வரை 49.1 சதவீதமும், தரங்கள் 9-11வரை 50.7சத வீதமும் தரங்கள் 12-13வரை 56.5 சதவீதமும் ஆகும். ஆகவே, பாடசாலையை விட்டு விலகும்

வீதங்கள் ஆண்பிள்ளைகளிடையே கூடுதலாக இருப்பதனால், கூடுதலான பெண் பிள்ளைகள் இரண்டாம் நிலைத் தரங்களில் இடாப்பிற் சேர்க்கப்படுகின்றனர்.

எவ்வாறாயினும், இந்தப் பெரிய எண்கள், பாடசாலையை விட்டுவிலகும் வீதங்கள், உறவடிப்படையில், நகரத்திலுள்ள குறைந்த வருமான அயல்களிலும், தூரக்கிராமங்களிலும், பெருந்தோட்டங்களிலும் அதிகமானவையாக இருப்பதனால், பரந்த ஏற்றத்தாழ்வுகளை மறைக்கின்றன. வறுமையில் வாழ்கின்ற குடும்பங்கள், எழுதுகருவி வகை, ஆடைகள், காலணிகள் என்பன மீதான செலவினம் போன்ற கல்விக்கான தனிப்பட்ட செலவுகளை ஈடு செய்வதற்கு இயலாதவர்களாக, உள்ளவரென ஆய்வுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. இந் நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட பாடசாலை வருகைக் குழுக்களினாலும் கண்காணிப்புக் குழுக்களினாலும் உள்ளூர்ச் சமுதாயங்களில் கட்டாயக் கல்வி ஒழுங்குவிதிகள் பயனுற வலுவுறுத்தப்படுவதில்லை என்பதுடன், பாடசாலையினதும் அதன் அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் பண்பாண்மை, சமூக உட்படுத்துகையை மேம்படுத்துவதாகப் பெருமளவுக்குத் தோன்றவில்லை. சிங்களவருக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையே கல்விக்கான அணுகுகையில் பால் வித்தியாசங்கள் எவையுமில்லை. பெண்பிள்ளைகளின் கல்விக்கான கிராமிய முஸ்லீம் சமுதாயங்களின் எதிர்மாறான சமூக-கலாச்சார மனப்பாங்குகள் மாறிக் கொண்டுவருகின்றன. கல்வி அணுகுகையில் பெருந்தோட்டங்கள் இன்னமும் அனுகூலம் குறைந்தனவாகவுள்ளன, ஆனால் கடந்தகாலத்தில் அவர்களின் குடும்பங்களிலிருந்த பெண்பிள்ளைகள் ஓரப்படுத்தப்பட்டபோதிலும், 2001ஆம் ஆண்டில் நடைபெற்ற வருடாந்தப் பாடசாலை ஆட்டொகைக் கணிப்பில் தரங்கள் 1-5 வரை 48.2 சதவீத மாணவர்கள், தரங்கள் 6-8 வரை 48.6சதவீத மாணவர்கள், தரங்கள் 9முதல் 11வரை 53.5சதவீத மாணவர்கள் பெண்பிள்ளைகளாகவிருந்ததால், பால் சமத்துவம் எய்தப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது.

கல்விக் கொள்கையின் நிழலுக்குத் தள்ளிவைக்கப்பட்டோரும் அவர்களின் வாழ்க்கையிலான வாய்ப்புக்களை சீராக்கும் கல்விக்கான உரிமை மறுக்கப்பட்டோருமான எளிதில் தாக்கமுறத்தக்க ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் கொண்ட தொகுதியும் எல்லாச் சமுதாயங்களிலும் உள்ளது. பின்வருவன இவற்றுட் சிலவாகும்:-

(i) பிரதான சமூகத்துக்கு வெளியே வாழ்கின்ற வேடரின் பிள்ளைகளும் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த பிள்ளைகளும்.

(ii) பாரதூரமான இயலாமைகளற்ற பிள்ளைகளை விதிமுறைப்பட்ட பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தில் ஒன்றிணைப்பதற்கு எஸ்ஐடீஏ இனால் நிதியளிக்கப்பட்ட விசேட கல்வி நிகழ்ச்சித்திட்டம் முடிவடைந்ததுடனும், நிறுவனஞ்சார் கவனிப்புக்கான போதிய ஏற்பாடு இல்லாமையினாலும் அவர்களின் நிலைமை குறைவடைந்துள்ள உடல், உள இயலாமைகளையுடைய பிள்ளைகள்.

(iii) வறுமையிலுள்ள குடும்பங்களினால் பொருளாதாரச் சொத்துக்கள் எனக் காணப்படும் வேலைசெய்யும் பிள்ளைகளுக்கு கல்விக்கான அணுகுகை மறுக்கப்பட்டு அவர்கள் விதிமுறைப்படாத துறையினுள் சேர்க்கப்படுகின்றனர்; சில வேளைகளில் அவர்கள் தீங்குவிளைவிக்கின்ற தான்புரி தொழில்களிலும் அதெர ஒழுங்மைப்பின் சொற்களில், வர்த்தகப் பால்ரீதியிலான வேலை மற்றும் மதுபானத்தையும் போதைப் பொருட்களையும் கள்ளமாக இடப்பெயர்த்தல் போன்ற 'பிள்ளைகளைத் தொழிலுக்கமர்த்துவதில் மிகக் கீழ்த்தரமான வகைகளிலும்' அவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

(iv) நிறுவனஞ்சார் அல்லது குடும்பக் கவனிப்பை அணுகமுடியாத அநாதைகளும், கைவிடப்பட்ட, இலம்பாடுற்ற பிள்ளைகளும்.

(v) விளக்கமறியல் மனைகளிலும் தடுத்துவைத்தல் நிலையங்களிலும் உள்ள பிள்ளைகள்.

(vi) தனியாக அல்லது அவர்களின் குடும்பங்களோடு வாழ்கின்றவர்களும், பொருளாதார, பால் ரீதியிலான சுரண்டுதலுக்கு, பதார்த்தங்களுக்கு, துஷ்பிரயோகத்துக்கு

மற்றும் குற்றச்செயல்களுக்கு வெளிக்காட்டப்பட்டவர்களுமான தெருப்பிள்ளைகள், அத்துடன்

(vii) மிக்க அண்மைக்காலத்தில் தொகுதி – புனர்வாழ்வும் கல்வியுட்பட அடிப்படைச் சேவைகள் அவசரமாகத் தேவைப்படுகின்றவர்களான வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்களையும் புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம் குடும்பங்களையும், வட மத்திய, ஊவா மாகாணங்களில் சிங்களக் குடும்பங்களையும் சேர்ந்தவர்களும், இடம் பெயர்க்கப்பட்டவர்களும் அல்லது அவர்களின் வீடுகளில் உயிரோடிருந்தவர்களும் ஆயுதந்தாங்கிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுமான குடும்பங்களிலுள்ள பிள்ளைகள்.

எளிதில் தாக்கமுறத்தக்க இந்தத் தொகுதிகள் எல்லாச் சமுதாயங்களையும் சேர்ந்த பிள்ளைகளைக் கொண்டுள்ளது; மிகக் கூடுதலாகப் பொருளாதாரரீதியில் அனுகூலம் குறைந்தவராகவுள்ளோரே, அத்தகைய சமூகப் புறக்கணிப்பின் பாரிய பலியானோராகவுள்ளனர்.

பதின்மூன்று பல்கலைக்கழகங்களிலும் இடவசதி போதாமையின் விளைவாக உயர்கல்வி மட்டத்தில், இயைபான வயதுத் தொகுதியினரில் 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதம் வரை மட்டுமே பல்கலைக்கழகங்களில் உள்ளனர்; ஏனைய அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது நினைத்துப் பார்க்க முடியாத அளவு மிகக் குறைந்தாகும். இந்த வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களினுள், 1995/96ஆம் ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்டவர்களுள் 47.8 சதவீதமும், 1999/2000 ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்டவர்களுள் 51.7சதவீதமும் பெண்களாக இருந்துள்ளனர். பெண்மாணவர்கள், எந்திரவியல் நெறிகளிலும் (14.6%), புடவை, உடுதுணிக் கைத்தொழில் தொடர்பான நெறிகள்(16.7%), கணனி அறிவியல்(18.3%), கணிய அளவை செய்தல் (23.3%), பௌதீக அறிவியல் (24.4%)

மற்றும் பிரயோக அறிவியல் (36.9%) என்பவற்றில் குறைவாகப் பிரதி நிதித்துவப்படுத்தப்பட்டனர்; இவையெல்லாம் உ/த அறிவியற் பிரிவிலான இடாப்பிற் சேர்க்கப்பட்டவாறு 'ஆண் அதிதிறமை'த் துறைகளாகக் காணப்பட்டன. அவர்கள் சட்டத்துறைகளிலும் (78.8%) கலைத்துறைகளிலும் (71.6%) மேலதிகப் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர்.

இலங்கைச் சிறுபான்மைச் சமுதாயங்களும் அண்மைக்காலத்தில் இந்தியத் தோற்றுவாயைக் கொண்ட தமிழர்களும், இரண்டாம் நிலைக் கல்விக்கான தாமதித்த அணுகுகையினால் பல்கலைக்கழகக் கல்விக்கான அணுகுகையில் அனுகூலம் மிகக் குறைந்தவர்களாக உள்ளனர். 1995/96 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டோருள் 77.6% சிங்களவர்களாகவும், 17.02% தமிழர்களாகவும், 5.1% இலங்கை முஸ்லிம்களாகவும் 0.2% 'ஏனையோராகவும்' (உ-ம் பறங்கியர், மலேமக்கள்) இருந்தனர். உயிரின அறிவியல், மருத்துவம் தொடர்பான நெறிகள், கமத்தொழில் கட்டிடக்கலை என்பவற்றில் சிங்களவர் மேலதிகமாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டனர். இலங்கைத் தமிழர்கள் எந்திரவியலும் கணிய அளவை செய்தலிலும் மேலதிகமாகப் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டு சட்டத்திலும் கட்டிடக்கலையிலும் பாரியவகையில் குறைவாகப் பிரதிநிதித் துவப்படுத்தப்பட்டனர்; அத்துடன் இலங்கை முஸ்லிம்கள்,கலைகளும் சட்டமும் தவிர மற்றெல்லா நெறிகளிலும் குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டனர். இந்தியத் தமிழர் தனி வேறாக இப்போது எண்ணப்படுவதில்லை; ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவும் கணக்கில் எடுக்க முடியாதவர்களுமாக உள்ளனர். இவ்வித்தியாசங்கள், இரண்டாந்நிலைக் கல்விக்காக இடையிற் சேர்க்கப்படுவதிலான ஏற்றத்தாழ்வுகளிலிருந்தும், 1970ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலிருந்து அனுமதிப்புகளில் பயன்படுத்தப்பட்டது. மாவட்ட அனுமதிப்பங்கு

முறைமையிலிருந்தும் விளைகின்றன. அனுமதிப்பங்கு முறைமையானது, சனத்தொகை அடிப்படையிலானதாகவும் கல்விரீதியில் அனுகூலம் குறைந்த மாவட்டங்களிலிருந்து வருகின்ற மாணவர்களுக்கு உதவுவதற்கு உட்கருதப்பட்டதாகவும் இருக்கையில், ஏனைய மாவட்டங்களிலுள்ள உயர்ந்த புள்ளி பெறுவோரின் வாய்ப்புக்களைப் பங்கமான முறையில் பாதிக்கின்றது; அத்துடன் யாழ்ப்பாண, கொழும்பு மாவட்டங்களில் பல்கலைக்கழகக் கல்விக்கான வாய்ப்புக்களின் மட்டுப்படுத்துகையானது இனரீதியிலான அழுத்தங்களை அதிகரித்து, எல்லாச் சமுதாயங்களிலுமுள்ள உயர்தொழில்சார் குடும்பங்களிலான பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் துரிதப்படுத்திற்று.

அரச தொழினுட்ப வாழ்க்கைத் தொழில்சார் வசதிகள், வித்தியாசமான வெளிச்செய்கை நிலைகளில் பாடசாலையிலிருந்து வெளியேறுவோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதியனவல்ல. ஆகவே, தனியார்துறை நிகழ்ச்சித் திட்டங்களில் இடையிற் சேர்க்கப்படுவதற்கு இயலாதோராகவுள்ள செல்வந்தரல்லாத எல்லாச் சமுதாயங்களுக்கும் கிடைக்கக் கூடிய நுட்ப அபிவிருத்திக்கான வாய்ப்புக்களைப் பங்கமான முறையில் பாதிக்கின்றன. பெண்கள், பாரம்பரிய 'பெண்' நெறிகளில் செறிந்திருக்கவும் தொழினுட்பம் தொடர்பான நெறிகளில் குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கும் சாத்தியமுள்ளவராகவிருப்பதனால், தொழினுட்பக் கல்லூரிகள், வாழ்க்கைத்தொழில்சார் பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் பேரவை, தேசிய தொழிற்பயிற்சி, மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, அத்துடன் கிராமக் கைத்தொழில்கள் திணைக்களம் போன்ற அரச முகவர் நிலையங்களினால் தீவு பூராகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட எல்லா நிறுவனங்களிலும் பால் சமமின்மைகள் பரந்துள்ளன.

செயல் நிறைவேற்றம்

ஆட்டொகைக்கணிப்பு ஆய்வுகளில் உறவடிப்படையிலான உயர்ந்த கல்வியறிவு மட்டங்கள், ஆகக்குறைந்தது ஆரம்பநிலைக் கல்விக்கான அனுகுகையானது பிரதிபலிக்கின்றன. மத்திய வங்கியினர்(1996/97)பாவனையாளர் நிதி மற்றும் சமூக-பொருளாதார ஆய்வு, நகரத்துறையில் முறையே 94.3% ஆண் கல்வியறிவையும் 89.4% பெண் கல்வியறிவையும் (வடக்கு,கிழக்குத் தவிர), 96.1% ஆண் கல்வியறிவையும் 93.0% பெண் கல்வியறிவையும் அறிக்கைசெய்தது; அத்துடன் கிராமியத் துறையில் 94.5 சதவீதத்தையும் 90.0 சதவீதத்தையும் பெருந் தோட்டத்துறையில் 87.2 சதவீதத்தையும் 67.3 சதவீதத்தையும் அறிக்கை செய்தது. அண்மைக் காலங்களில் கல்வியறிவு மட்டங்கள் சீராகியுள்ள போதிலும், தெளிவாகப் பெருந்தோட்டத்துறையே கூடுதலாக அனுகூலம் குறைந்ததாகும். பாடசாலை வயதுச் சனத்தொகையில் பால் வித்தியாசங்கள் பெருமளவுக்கில்லை. 10-19 வரையிலான வயதுத் தொகுதியில் 95% ஆண், பெண் கல்வியறிவு உள்ளது. எனினும், பாடசாலை இடாப்புகளிற் சேர்த்தலிலான ஏற்றத்தாழ்வுகள் பெருந்தோட்டக் குடும்பங்கள் பற்றிய பெரிய ஆய்வுகளிலும் புள்ளிவிபரங்களிலும் காணப்பட்டவாறு அனுகூலம் குறைந்த குடும்பங்களில் உள்ள பெண்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையே கல்வியறிவின்மைத் தொகுதியினை விளைவித்துள்ளன.

நுழைவுத் தகுதிகளிலிருந்தும் ஆரம்பநிலைப் பாடசாலை மட்டத் தகுதிகளிலிருந்தும், இரண்டாந்நிலைப் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் உள்ள பொதுப் பரீட்சைகள் வரை எய்துகை மட்டங்களில் பால் வித்தியாசங்கள் மிகக் குறைவாக அல்லது இல்லாமையாக உள்ளன. மொனறாகலையானது, பொருளாதாரரீதியிலும் கல்விரீதியிலும் மிகவும் அனுகூலம் குறைந்ததாகவும், நுவரெலியா, அதன் 50% பெருந்தோட்டச் சனத்தொகை உருவெளியின் ஒரு முனைப்பிலும் கொழும்பும் கம்பஹாவும் மற்றையதிலுமாக, எய்துகையிலும் தேர்ச்சி

மட்டங்களிலும் மாவட்டங்களுக்கிடையேயான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. தற்போது தமிழ் மொழி மூலத்தில் தகைமைபெற்ற ஆசிரியர்கள் மிகக்குறைவாகவுள்ளனர் என்பதுடன், எல்லா ஆசிரியர்களையும் தொழிலுக்கமர்த்துவதில் துர்ப்பகிர்வும் உள்ளது. சமூக-பொருளாதாரப் பின்னணி, பாடசாலை வசதிகளின் தரம் மற்றும் பாடசாலைச் செயல் நிறைவேற்றம் என்பவற்றின் இணக்கம் உண்டென்பது தெளிவாகின்றது.

## கல்வி, இனரீதியிலான சமூகம் மற்றும் பால் சமத்துவத்தினூடான நட்புறவு

கல்விசார் வாய்ப்புக்களை நீடிப்பதற்குக் கொள்கைகள் நாடியிருக்கையில், இனரீதியிலான யுத்தத்தினால் அழிவுக்குட்பட்ட பல்லின, பல்மத நாட்டில் தேசியச் சமூகத்தை மேம்படுத்துவதற்குக் கல்விசார் செயல்முறைகளைப் பயன்படுத்துவதற்கு ஒத்த முயற்சிகள் இருந்திருக்கவில்லை. கல்விச் சாதனங்களில் இனரீதியிலான மாறா நிலைகளும் அதே முக்கியத்துடன், வித்தியாசமான சமுதாயங்களையும் மதங்களையும் சேர்ந்த பிள்ளைகளிடையே பரஸ்பரப் புரிந்துணர்வையும், ஏனைய கலாச்சாரங்களுக்கான மரியாதையையும், அதன் எல்லாச் செழிப்புடனும் வேறுபாட்டை ஏற்றுக் கொள்ளுதலையும் மேம்படுத்துவதற்குப் பாடவிதான அபிவிருத்தியிலும் பாடப் புத்தக உற்பத்தியிலுமான தவறுதல், சகிப்பிலாத்தன்மையையும், சுமுகமின்மையையும், யுத்தத்தையும் அதிகரித்துள்ளது. யுத்தத்தைத் தீர்த்துவைப்பதனை வசதிப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன, ஆனால் ஆக்கபூர்வமான மனப்பாங்குகளையும் ஆட்களிடையேயான உறவு முறைகளையும் மேம்படுத்துவதன் மூலம் அத்தகைய யுத்தத்தைத் தடுத்தல் போதிய கவனத்தைப் பெறவில்லை. கலந்த சனத் தொகையைக் கொண்டவையும் இருமொழி மூலங்களைக் கொண்டவையுமான பாடசாலைகளிலுள்ள மாணவர்கள், அறிவுசார், சமூக, கலாச்சார இடை நடவடிக்கைகளில் தமது சொந்தச் சமுதாயத்துடனேயே பெருமளவு சேர்ந்து கொள்ளும் சாத்தியமுடையோராகவுள்ளனர்.

கல்வியிலான நட்புறவுச் செயல்முறை, வாழ்க்கைத் தொழில்சார் நோக்கைக் கொண்ட பாட விதானங்களிலான பால் வித்தியாசப்படுத்தல் மூலம், கல்விசார் சாதனங்களில் பால் பங்களிப்பு மாறா நிலைமைகள் மூலமும், ஆண்பிள்ளைகளிலிருந்தும் பெண்பிள்ளைகளிலிருந்தும் வித்தியாசமான நடத்தை எதிர்பார்ப்புக்களின் மூலமும், எதிர்மாறான பால்ரீதியிலான நியமங்களை மீளவலுப் படுத்தியுள்ளமை காரணமாக, கல்வியானது பெண்களுக்கு அதிகாரமளிக்கத் தவறியுள்ளது. எல்லாப் பெண்பிள்ளைகளும் இந்த நியதிகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் இசைந்தொழுகாதிருக்கும் அதேவேளையில் பால் ரீதியிலான பாடவிதானமும் 'மறைவான பாடவிதானமும்', முன்னர் குறிப்பீடு செய்யப்பட்ட பால் சமமின்மைகளில் காணப்பட்டவாறு, பெண் பிள்ளைகளின் அபிலாஷைகளினது மட்டத்தைக் குறைக்கும் அல்லது உயர்தர மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் கல்வியில் அவர்களின் விருப்பத் தெரிவுகளின் மீது செல்வாக்குச் செலுத்தும் சாத்தியம் கொண்டிருந்தன. பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டத்திலான கல்வி, கோத்திரத் தலைவரின் அதிகார எல்லையையும் கீழ்ப்படிதலையும், சீதன முறைமை, கன்னிமைப் பரீட்சிப்பு மற்றும் பால் அடிப்படையிலான வன்செயல்போன்ற சமூக வழக்கங்களையும் மீளவலுப்படுத்துகின்ற கொடுமையான நியதிகளை எதிர்ப்பதற்குப் பெண்களை இயன்றவராக்கத் தவறியுள்ளது. வாழ்க்கைத் தகுதிகள் என்ற பாடம், மற்றவற்றுக்கிடையில், தேசிய சமூகத்தையும் பால் சமத்துவத்தையும் மேம்படுத்துவதற்குப் புதிய பாடவிதானத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த எண்ணக்கருக்கள் எல்லாப் பாடவிதானம் மற்றும் கூட்டுப் பாடவிதானச் செயற்பாடுகளினுள் ஒன்றிணைக்கப்பட வேண்டுமாதலால வெறுமனே ஒரு 'பாடம்' மூலம் இக்குறிக்கோள்களை எய்துவது சந்தேகத்திற்குரியதே.

காப்பானவொரு சூழல்

சுரண்டுதலிலிருந்தும் துர்ப்பிரயோகத்திலிருந்தும் பாதுகாக்கப்படுதல் பிள்ளையின் உரிமைகளுள் ஒன்றாகும்; எல்லாப் பாடசாலைகளும் பிள்ளைகளுக்கான காப்பான சூழலை

அளிக்கின்றனவாவென்பது விவாதத்திற்குரிய விடயமாகும். சரீரத் தண்டனையைத் தடைசெய்யும் சுற்றறிக்கையொன்று கல்வியமைச்சினால் விடுக்கப்பட்டபோதிலும், மருத்துவ சிகிச்சை அளிக்கும் அளவு கொடூரமான தண்டனைக்குப் பிள்ளைகள் ஆளாகி வருகின்றனர். குறிப்பாகப் பாடசாலைகளிலான பிள்ளைகளின் துர்ப்பிரயோகமும் பால் ரீதியிலான துர்ப்பிரயோகமும் வெளிவராது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றனவென்றாலும் அண்மைக் காலமாக இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றமை வெளியுலகிற்குத் தெரியத் தொடங்கியுள்ளன. மறைவானவொரு பிரச்சினையாகவிருந்தது, ஆனால் அண்மைக் காலங்களில் புரியப்படும்வகையில் வெளிப்படையாகியுள்ளது. துர்ப்பிரயோகம் புரிபவர்கள் கல்வி கற்பிக்கின்றவர்களே. ஆளாக்கப்படுவோரின் நிலை மோசமாக உள்ளதென்பதையே இது வெளிப்படுத்துகின்றது.

இடையீடுகள்

சிறுபான்மையோர் சம்பந்தப்படுமிடத்து

- வடக்கிலும் கிழக்கிலும் கல்விவசதிகளின் மறுசீரமைப்பு அவசியமாகவுள்ளது;
- தேசியக் கல்வி முறைமையின் உள்ளார்ந்த ஒரு பாகமாகப் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான ஆதாரத்தைத் தொடர்ந்தளிப்பதற்கான தேவையுள்ளது; அத்துடன்
- வேடர் மற்றும் தாழ்ந்த சமுதாயங்களிலுள்ள பிள்ளைகளுக்கும் கல்வி கற்பதற்வாய்ப்பு வசதிகள் அளிக்கப்படல் வேண்டும்.

கல்விக்கான எல்லாப்பிள்ளைகளினதும் உரிமை பின்வருவனவற்றினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்:

- எளிதில் பலியானவர்களாகக்கூடிய தொகுதிகளில் உள்ளோர் உட்பட எல்லாப் பிள்ளைகளையும் கல்வி

முறைமையின் நோக்கெல்லைக்குள் கொண்டு வருவதற்குக் கட்டாயக் கல்விச் சட்டவாக்கங்களை வலுவுறுத்தும்படியும் விதிமுறைப்படாத நிலையங்களைப் பலப் படுத்தும்படியும் அரசினதும், உள்ளூர் நிருவாகிகளினதும், கட்டாயக் கல்விக் குழுக்களினதும் ஆதரவைத் திரட்டுதல்.

- வறுமையிலுள்ள பிள்ளைகளைப் பாடசாலைகளில் இடாப்பிற் சேர்ப்பதற்குத் துணை புரியும்படியும் பிள்ளைகளின் துர்ப்பிரயோகத்திலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூர் அலுவலர்களுக்கும், அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தும்படியும் அரசு, அரசுசாராத முகவர் நிலையங்கள் மற்றும் அசா ஒழுங்கமைப்புகள் என்பவற்றுக்கு உந்துதலளித்தல்.
- பிரதேச நவோதயப் பாடசாலைகளின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கும் 'எல்லோருக்குமான அறிவியலும் தொழினுட்பவியலும்' என்பதற்கான அணுகுகையை மேம்படுத்தவதற்கும் அரசுக்குத் துணைபுரிதல்.
- கல்வியிலான தரத்தையும் பிள்ளையின் முழுமையான அபிவிருத்தியையும் உறுதிப்படுத்துவதற்கும், இனரீதியிலான, பால் பங்களிப்பு மாறாநிலைகளை நீக்குவதற்கும், தேசியச் சமூகத்தையும், பல்கலாச்சாரத்துவத்தையும், பால் சமத்துவத்தையும் மேம்படுத்துகின்ற சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்கும் பாடவிதான மீளாய்வைக் கண்காணித்தல்.
- இனரீதியிலான, சமூக-பொருளாதாரச் சிறுபான்மையோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான மூலவளங்களைக் குறித்தொதுக்குவதில் 'ஆக்கபூர்வமான ஓரங்காட்டுகைக்காக' ஆதரவு திரட்டுதல்.

தொழில்

இலங்கையிலுள்ள எல்லாச் சமுதாயங்களிலுமான பெண்கள், பல நூற்றாண்டுகளாகப் பொருளாதார விருத்தியில் பங்கு வகித்து இருந்துள்ளனர். தொழில் துறைகளில் பெண்களின் பங்களிப்பு வீதங்கள், எல்லா மட்டங்களிலும் 1980 கள் வரை அதிகரித்து, 1990 முற்பகுதியில் குறைந்து மீண்டும் உயர்ந்துள்ளமையை தேசிய ஆய்வுகளிலிருந்து அறிய முடிகிறது. ஆனால் பெருமளவினதான விகிதாசாரத்தினரான பெண்கள் விதி முறைப்படாத துறையில் உள்ளனர்; அவர்கள் குறைவாகப் எடை போடப்பட்டுக் கணக்கில் எடுக்கப்படுவதுமில்லை. தொழில் வாய்ப்புக்களில் மாற்றமடைந்து வரும் நிலை காரணமாக அவர்கள் ஆடை வேலையாளர்களாக, நாட்டைவிட்டகலும் வீட்டுவேலையாளர்களாக மற்றும் பெருந்தோட்ட வேலையாளர்களாகத் தொடர்ந்தும், பொருளாதாரத்துக்கும் தேசிய அரசிறைக்கும் முக்கிய பங்களிப்பு ஆற்றி வருகின்றனர். ஆசிரியர்கள், தாதிமார், வீட்டு உதவிப் பெணகள் என்போராகச் சேவைத் துறையிலும், உள்நாட்டுக் கமத்தொழிற்றுறையிலும், சிறிய உள்ளூர்க் கைத்தொழில்களிலும், நகரின் குறைந்த வருமான விதிமுறைப்படாத துறையிலும் பெண்கள் செறிந்துள்ளனர். பெரும்பான்மை, சிறுபான்மைச் சமுதாயங்களிலுள்ள பெண்கள் அத்தகைய பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். உறவடிப்படையில், சிறுபான்மையைச் சேர்ந்த பெண்களுள் ஒரு சிலரே ஆடை வேலையாளர்களாக உள்ளனர்; ஏனெனில், ஏற்றுமதி முறைப்படுத்தல் வலயங்கள் மேல் மாகாணத்திலும் அமைந்துள்ளமையினாலும் இனரீதியிலான யுத்தம் வடக்கிலும் கிழக்கிலும் கிராமிய ஆடைத் தொழிற்சாலைகளின் விசாலிப்பைத் தடுத்துள்ளமையினாலும் இந்நிலைமை பெரும்பாலும் ஏற்பட்டுள்ளது. மேற்காசிய நாடுகளிலுள்ள மதத்துக்கும் கலாசாரத்துக்கும் அவர்களின் மதஞ்சார், கலாசார உறவுகள் காரணமாக, முஸ்லிம் பெண்கள் நாட்டை விட்டகலும் வேலையாளர்களுக்கிடையே அதிகமாகக் காணப்படுகின்றது.

19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியக் குடியேற்ற நிருவாகத்தினால் உருவாக்கப்பட்ட பெருந்தோட்டத் தமிழ்ச் சமுதாயத்தில், பெண்கள் தொழிற்படையினருள் அரைவாசியாக இருந்துள்ளனர்; ஆனால் 1984ஆம் ஆண்டுவரை சமமற்ற கூலிகள் அவர்களுக்குச் செலுத்தப்பட்டன. பெருந்தோட்டங்களானவை, இலங்கை சுதந்திரமடைந்தபின்னர், தனிப்பட்ட சொத்தாண்மைகளிலிருந்து அரசச் சொத்தாண்மைக்கும் 1992ஆம் ஆண்டிலிருந்து தனியார் துறை முகாமைத்துவத்துக்கும் அதிகரித்த சொத்தாண்மைக்குமாக மாற்றங்களின் முழுவட்டத்துக்கும் உட்பட்டுள்ளன. பெண் தொழிலாளருக்கான தேவை குறைந்து போகவில்லை, ஆனால் முன்னைய ஆண்டுகளில் இருந்த தொழில் உறுதிப்பாட்டுக்கு மாறாக அமயவேலை அதிகரித்துள்ளது; அத்துடன் அதிகரித்துவரும் கல்விசார் வாய்ப்புக்களுடன், இளம்பெண்கள், தொழில் தேடி பெருந்தோட்டத் துறையை விட்டுச் செல்கின்றனர். மிகச்சிறிய 'சிறுபான்மையோர்'- ஆன வேடரும் தாழ்ந்த சாதிகளும் அவர்களின் பாரம்பரிய தான்புரி தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

1970, 1980 களில் அலுவலக முறையான தொழிலின்மை வீதங்கள் அதிகமாகவிருந்து அண்மைக் காலங்களில் குறைந்திருகின்றமை காரணமாக, பெண்களின் வீதங்கள் ஆண்களினதையும் விட இரட்டிப்பாகி விட்டதால் எப்பொழுதும் இருந்துள்ளமையினால், தொழில் வாய்ப்புக்களில் அவர்கள் தெளிவாக அனுகூலம் குறைந்தவர்களாக உள்ளமை தெளிவு. ஆண்களின் தொழிற் பயன்பாட்டு வடிவங்கள் உறவடிப்படையில் பல்லாண்டுகளாக நிலையுறுதி கொண்டனவாக இருக்கையில், பெண் வேலையாளர்களுக்கிடையே அமய வேலைக்கான அதிகரித்த போக்கு இருந்துள்ளதுடன், சம்பளமற்ற குடும்பத் தொழிலாளராகப் பெண்களைப் பயன்படுத்துவதில் குறிப்பான அதிகரிப்பும் இருந்துள்ளது. தொழிற்சந்தையில் பால் பிரிவும், மேல்நோக்கிய தான்புரிதொழில்சார் இயக்கத்தை ஆகக்கூடிய முடிவுசெய்கின்ற நிலைமைக்கு வரையறுக்கின்ற 'பளிங்கு

உச்சவரம்பும்' சிறிதளவே மாறியுள்ளது. உத்தியோகபூர்வப் புள்ளிவிபரங்களின்படி பிள்ளைகளைத் தொழிலுக்கமர்த்துதற் சம்பவங்கள் குறைவாகவுள்ளன(ஏறத்தாழ 3%). ஆனால் பெருமளவினதான விகிதாசாரத்தினரான பிள்ளைகள் சம்பளம் செலுத்தப்பட்ட, மற்றும் குடும்பத் தொழிலாளராக ஈடுபட்டுள்ளனரென சிறிய ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கை அரசியலமைப்பு(1978) பால் சமத்துவத்தை உத்தரவாதமளிக்கின்றது ஆனால் தொழிலிலான ஓரங்காட்டாமைபற்றிய அதன் ஏற்பாடுகள் பகிரங்கத்துறைக்கு வரையறுக்கப்பட்டுள்ளது; ஆதலால், பெண் வேலையாளர்களுள் பெரும்பான்மையோருக்குப் பாதுகாப்பில்லை. ஐநா சமவாயங்களினால் சர்வதேச நியமங்கள் தாபிக்கப்பட்டுள்ளன - இலங்கை உறுதிப்படுத்தியுள்ள பெஓநீச தினாலும் சதொஓ சமவாயங்களினாலும், இவற்றுட் சிலவற்றை இலங்கை உறுதிப்படுத்தி தேசியத் தொழிற் சட்டவாக்கங்களில் உள்ளடக்கியுள்ளது; அத்துடன் மகளிர் பட்டயம் (1983) இவற்றை உள்ளூர் சூழலுக்குக் கைமாற்றியுள்ளன. எவ்வாறாயினும், வழக்க முறையில், சட்டங்களினதும் ஒழுங்குவிதிகளினதும் தெளிவான மீறுதல்கள் உள்ளன.

மகளிர் பட்டயத்தில் 'நீதி நன்மைகளுக்காகப் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு' எல்லாப் பெண்களுக்கும் ஆண்களுக்குமுள்ள சமவுரிமை என மொழிபெயர்க்கப்பட்ட 'எல்லா மனிதரினதும் பராதீனப்படுத்தப்படமுடியாத உரிமையொன்றாக' வேலைசெய்வதற்கான உரிமை(பெஓநிச), உறவடிப்படையில் நலங்கெட்ட பொருளாதாரத்தின் குறைவான உட்கொள்ளும் திறனினாலும், பெண்களின் மகப்பேற்றுப் பங்களிப்பின் விடயத்தில் பல குடும்பங்களினாலும் சுமத்தப்பட்ட நியதிமுறையான தடைகளினாலும் தடைப்பட்டுள்ளது. வேலைசெய்வதற்கான உரிமை பிள்ளைகளுக்கு நீடிப்பதில்லை என்பதுடன், 15 வயதான ஆகக்குறைந்த தொழில் வயது

சதொமு சமவாயங்களில் விதிக்கப்பட்டு முள்ளது. 1999 திசெம்பர் மாதம்வரை இலங்கையில் தெளிவான ஆகக்குறைந்த தொழில் வயது இருக்கவில்லை; இத்தேதியில் ஆகக் குறைந்ததாக 15 வயதை விதிப்பதற்குத் தொழிற் சட்டவாக்கங்கள் திருத்தப்பட்டன. இம்மாற்றம் பற்றிய விழிப்புணர்ச்சி, பெருந்தோட்டத் துறையுட்பட விதிமுறைப்பட்டதுறைக்கு வெளியே வரையறுக்கப்பட்டுள்ளது என்பதுடன், எல்லாச் சமுதாயங்களிலும் வறுமையிலுள்ள குடும்பங்களினால், வருமானங்களை அதிகரிப்பதற்கெனப் பிள்ளைகள் இன்னமும் பயன்படுத்தப்படுகின்றனர்.

ஆட்சேர்த்தல், தொழிலிலமர்த்துதல், பதவியுயர்த்தல், சேவை நிபந்தனைகள் மற்றும் தொழில் உறுதிப்பாடு என்பவற்றின் நியதிகளில் தொழிலில் ஓரங்காட்டாமை, சமவாயங்களிலும் மகளிர் பட்டயத்திலும் அடிக்கோடிடப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பெண்கள் உட்பட பெண் வேலையாளர்கள் தொடர்பாக மீறுதலில் அவற்றுக்குக் கூடுதலான கௌரவமுண்டெனச் சுட்டிக் காட்டுவதற்கு சிறிய ஆய்வுகளில் போதிய சான்றுண்டு. தொழிற்சாலைகளிற்போன்று உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்குக் குறைந்த செலவுத் தொழிலாளாராக அல்லது ‘ஆண்’ ‘பெண்’ தொழிற்றுறைகளின் மாறாநிலைகளினது அடிப்படையில் பெண்களைப் பாரம்பரியமற்ற தொழினுட்பத் தொழிலில் இடுவதற்காகத் தவிர, தொழில் தருநர்கள் அவர்களை ஆட்சேர்ப்பதற்குத் தயங்குகின்றனர். ஆண் தலைமைத்துவத்தின் ஆன்மீக உரிமையின் புலனுணர்வுகளின்மீது பெண்களை முகாமையாளர்களாகத் தொழிலுக்கமர்த்தாது விடுவதற்கு அல்லது அத்தகைய பதவிகளுக்கு அவர்களைப் பதவி உயர்த்தாதுவிடுவதற்குத தொழில்தருநர்கள் விரும்புகின்றனர்: பல தசாப்தங்களாக உயர்ந்த மற்றும் மத்திய மட்டத்திலான தொழிலில் சம ஊதியமளித்தல் ஒரு நெறியாகவிருந்துள்ளது, ஆனால் இதுவரை புகையிலை. கறுவா என்ற இரு தொழில்களைத் தவிர, கூலிகள் சபைகளினூடாகப் பெருந்தோட்டத்துறை உட்பட, விதிமுறைப்பட்ட துறையில் நுட்ப,

அல்நுட்பத் தொழிலில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது. கைத்தொழில்களிலும் பெருந்தோட்டங்களிலும் மிதமிஞ்சிய வேலை மணித்தியாலங்களைப் பொருட்படுத்தாது, (வழக்கத்தில் வலுக்கட்டாயமாகவிருக்கும் சாத்தியங்கொண்ட) மேலதிக நேர வேலை, மிக்க அண்மையில் நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன், இலங்கையானது 1984ஆம் ஆண்டில் இரவுவேலையைத் தடைசெய்கின்ற சதொஒ சமவாயங்களிலிருந்து விரகிக் கொண்டது; இரு சந்தர்ப்பங்களிலும் 'தரமான' வேலைநிலைமைகளுக்கு வேலையாளர்களுக்குள்ள உரிமையைக் கவனத்துட்கொள்ளாமல் தொழில்நருநர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகும்.

மகப்பேற்று லீவும் நன்மைகளும் தொழில் ஒழுங்குவிதிகளினால் விதிமுறைப்பட்டதுறையில் விதிக்கப்படுகின்றன, ஆனால் சம்பளத்துடனான 84 நாட்கால லீவும் பாலூட்டும் இடைவெளிகளும் தொழில்தருநர்களினால் விரும்பப்படுவதில்லை; அத்துடன் தந்தைக்கான லீவு ஒரு கொள்கையாக இன்னமும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பிள்ளைக் கவனிப்புச் சேவைகள் தொடர்பாக உள்ளூர்த் தொழிற்சட்டங்களில் விதிப்பனவு எதுவுமில்லை.

தான்புரிதொழில்சார் சுகாதாரத்துக்கும் தீங்குகளுக்கும் குறைந்த முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையானது இப்பிரச்சினைபற்றிய சதொஒ சமவாயத்தை உறுதிப்படுத்தவுமில்லை. பலவீனமான வேலையாளர்களுக்குத் தொழில் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறு நட்டஈட்டுக்கான அணுகுகை இல்லை. ஒப்பந்தத் தொழிலும் அமயத் தொழிலும் அதிகரிப்பதுடனும், கீழொப்பந்த வேலையாளர்களைக் கொண்ட விளிம்பளவிலான தொழிற்சந்தை விசாலிப்பதுடனும், அறிவித்தலின்றித் தொழிற்சாலைகளை மூடிவிடுமாறு 'உறுதியற்ற' கைத்தொழில்களைத் தூண்டுகின்ற பல்தேசியக் கம்பனிகளின்பாலான போக்குடனும்,

பெரும்பான்மையோரான வேலையாளர்களுக்குத் தொழில் உறுதிப்பாடில்லை. அறிக்கை செய்யப்பட்டதும் அறிக்கை செய்யப்படாததுமான பால்ரீதியிலான தொந்தரவு வேலைத்தலங்களில் நிலவுகின்றது, ஆனால் தடைகளைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் பரந்தளவில் செயற்படுத்தப்படுவதில்லை என்பதுடன், வேலையாளர்களைப் பாலியல் துர்ப்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பதற்குச் சதொஅ சமவாயங்கள் எவையுமில்லை. ஒன்றுசேர்வதற்கான சுதந்திரம் அரசியலமைப்பிலும் சர்வதேசச் சமவாயங்களிலும் போற்றிக் காக்கப்படுகின்றது, ஆனால் தொழிற்சங்கங்கள் ஏற்றுமதி முறைப்படுத்தல் வலயங்களில் பணியாற்றுவதற்கு இயலாதிருந்துள்ளன; அத்துடன் தொழிற்சங்கங்களில் முடிபுசெய்யும் பதவிகளில் பெண்கள் குறைவாகப் பிரதி நிதித்துவப்படுத்தப்படுகின்றனர். உதாரணமாகப் பெருந்தோட்ட வேலையாளர்கள் எல்லோரும் அதிகாரமுள்ள தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களாகவுள்ளனர், ஆனால் தொழிற்சங்கங்களின் பங்களிப்புப் பற்றி பெரும்பாலானோர் அறிந்திருக்கவில்லையெனக் காணப்பட்டுள்ளது.

அதிமுக்கியமாக, விதிமுறைப்படாத துறையிலுள்ள பெண் வேலையாளர்கள், தொழிற் சட்டங்களின் நோக்கெல்லைக்கு வெளியே இருப்பதுடன், வேலையாளர்களாக உரிமைகள் எவற்றையும் கொண்டிருப்பதாகத் தோன்றவுமில்லை. அரசானது காணிகளைக் குறித்தொதுக்கியுள்ள குடியிருப்புகளில், பெண்களைவிட ஆண்களுக்கு முந்துரிமை கொடுக்கின்ற முதற்பிள்ளைக்குரிய பிரித்தானிய வழக்கத்தைக் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தில்(1935) மரணசாதனமில்லா வழியுரிமை பற்றிய அட்டவணை அறிமுகப்படுத்துவதனால் பெண்கள் அவர்களது காணி உரிமைகளை இழந்துள்ளனர். கடனுக்கான அணுகுகை கிடைக்கக்கூடியதாக உள்ளது, ஆனால் வங்கிகள், வறியோருக்கு, குறிப்பாக வறிய பெண்களுக்குக் கடன் கொடுத்தலை ஒரு வசதியீனமாகக் கருதும் சாத்தியங்

கொண்டன. தொழினுட்பவியலைப் பயன்படுத்துவதற்கான திறமையைப் பெண்கள் கொண்டிருப்பதில்லையெனக் கருதப்படுவதனால், தொழினுட்பவியலுக்குப் பெண்களின் அணுகுகை வரையறுக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலானோர் பெண்வீட்டு வேலையாளர்களாகவுள்ள, நாட்டைவிட்டகலும் வேலையாளர்கள், சந்தையின் தேவைகளுக்கேற்ப விடப்பட்டதனால், 1990 களின் நடுப்பகுதிவரை, தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமை உடையோரினால் பொருளாதார, பாலியற் சுரண்டுதலுக்குப் பலியானோராகவிருந்தனர்; அவர்களின் வேலை நிலைமைகளையும் வாழ்க்கைத் தரத்தையும் சீராக்குவதற்கு அக்காலத்தில் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கையானது, 1996ஆம் ஆண்டில், நாட்டைவிட்டகலும் வேலையாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் பாதுகாத்தல் பற்றிய ஐநா சமவாயத்தை உறுதிப்படுத்தியது, ஆனால் நாட்டைவிட்டகலும் வேலையாளர்கள் பற்றிய சதொஒ சமவாயத்தை இன்னமும் உறுதிப்படுத்தவில்லை. வலுக்கட்டாயப் பதிவு, காப்புறுதி மற்றும் பயிற்சி, வேலையாளர்களின் பிள்ளைகளுக்காக, பெறுகின்ற வெளிநாடுகளிலும் இந்த நாட்டிலும் சேமநல வசதிகள், புறப்படுவதற்கான மானியமளிக்கப்பட்ட கடன்மற்றும் நாடு திரும்புவோரினால் வருமானத் தோற்றுவிப்பு அத்துடன் சில நாடுகளில் தொழில்தருநர்களுடனான ஒப்பந்தங்கள் என்பனவற்றுக்கு அரசு இப்போது ஏற்பாடு செய்கின்றது. ஆனால், தொழிலாளரைப் பெறுகின்ற நாடுகளில் வேலையாளர்களைப் பாதுகாக்கும் இருபுடை உடன்படிக்கைகள் இன்னமும் செய்யப்படவில்லை. ஏனெனில், இந்த நாடுகள், வெளிநாட்டிலுள்ள வேலையாளர்களைப் பாதுகாக்கும் ஐநா சமவாயத்தையும் சதொஒ சமவாயத்தையும் உறுதிப் படுத்துவதற்குத் தயங்கியுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

வீட்டிலான வேலையாளர்கள் பற்றிய அண்மைக்காலத்திய சதொஒ சமவாயம், கீழொப்பந்த வேலையாளர்களின் உரிமைகளையும் வேலை நிலைமைகளையும் பாதுகாப்பதற்கு நாடுகின்றது. ஆனால் ஏனைய சுய தொழிலிலுள்ள வேலயாளர்களுக்கு இப்பாதுகாப்பை நீடிப்பதில்லை. இலங்கையானது இச்சமவாயத்தை உறுதிப்படுத்தவில்லை. கமக்காரர்களுக்கும், மீன்பிடிகாரருக்கும், சுயதொழிலில் உள்ளவர்களுக்கும் சமூகக் காப்புறுதியை அறிமுகப்படுத்துவதற்கு அண்மைக் காலங்களில் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன, ஆனால் இக்கொள்கைகள் பற்றிய விழிப்புணர்ச்சி வரையறுக்கப்பட்டதாகத் தோன்றுகின்றதுடன், மிக்க வறியோர் அத்தகைய திட்டங்களுக்கு உதவுதொகை செலுத்தக் கூடிய நிலையிலில்லை.

ஆகவே, பின்வருவனவற்றுக்கான தேவை உள்ளதெனக் காணப்படுகின்றது:

- தொழிலில் சம வாய்ப்புக்கான சட்டவாக்கம்
- ஏலவேயுள்ள சட்டவாக்கத்தை வலுவுறுத்தல்
- பெண்களும் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் பறிக்கப்பட்டோர் செறிந்துள்ள விதிமுறைப்படாத துறைக்குத் தொழில் ஒழுங்குவிதிகளை நீடித்தல்.
- வெளிநாட்டு வேலையாளர்களைப் பாதுகாப்பதற்காக இருபுடை உடன்படிக்கையை மேம்படுத்துதல்.
- தொழிற்சங்கத் தலைமைத்துவப் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்.
- இந்திய சுய தொழிலிலுள்ள பெண்கள் கழகத்தின்(இசுபெக) மாதிரியின் மீது சுய தொழிலிலுள்ள பெண்களை ஒழுங்குபடுத்துதல்
- எல்லாச் சமுதாயங்களிலும் சட்டப்படியான கல்வியறிவையும் சட்ட உதவி நிகழ்ச்சித் திட்டங்களையும் நீடித்தல்.

ISBN : 955 - 582 - 117 - 8

Printed By: Unie Arts (Pvt) Ltd.